# செங்கை ஆழியான்

# அக்கினிக்குஞ்சு



[illegible] ..............................
அன்பளிப்பு [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
பிரவுன் வீதி
யாழ்ப்பாணம்

# அக்கினிக் குஞ்சு

செங்கை ஆழியான்

வெளியீடு

யாழ் இலக்கிய வட்டம்

யாழ்ப்பாணம்

- யாழ். இலக்கிய வட்ட வெளியீடு: 29
- 'AKKINIKKUNCHCHU'
  By 'SENKAI AALIYAN',
  82, Brown Rood, JAFFNA.


- (C) Mrs. K. Kunarasa,
  82, Brown Road, JAFFNA.


- First Edition: January 1983
- Published by: JAFFNA LITERARY CIRCLE
  (Yarl Ilakkiya Vaddam), Sri Lanka.
- Printed at: Vivekananda Printers Ltd, Jaffna.

விலை ரூபா 6-90

விற்பனையாளர்:

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
பெரியகடை, யாழ்ப்பாணம்.

**செங்கை ஆழியானின் 'பிரளயம்' என்ற நாவல் சாகித்திய மண்டலப் பரிசும், 'காட்டாறு' என்ற நாவல் வீரகேசரியில் முதல் பரிசும் பெற்றபோது நிகழ்ந்த பாராட்டு விழாவிற்கு அமரர் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்கள் உடல் நலமின்றிப் படுக்கையிலிருந்து எழுதியனுப்பிய ஆசியுரையை இந்நூலின் முன்னுரையாகச் சமர்ப்பிக்கின்றோம்.**

# முன்னுரை

அன்புள்ள செங்கை ஆழியானைப் பற்றிச் சொல்ல எவ்வளவோ இருக்கிறது. ஆம். ஐம்பது பக்கமுள்ள புத்தகத்திற்குச் சொல்லக்கூடிய விடயங்கள் என் நினைவில் இருக்கின்றன. அவற்றில் எதைச் சொல்வது? எதை விடுவது? என் மனம் ஊசலாடுகிறது.

தங்கள் கதைகளையும், தங்களைச் சேர்ந்தவர்களது படைப்புக்களையும் மாத்திரம் படித்துவிட்டு, ஆகா நாங்கள் தான் இந்த நாட்டின் இலக்கிய சாம்ராட்டுகள் என்று தங்கள் முதுகில் தாங்களே சொட்டிக் கொள்ளும் இலக்கியவாதிகள், செங்கை ஆழியானின் இலக்கிய முயற்சியைப் பற்றிப் பேசாமல் இருக்கலாம். எழுதாமல் விடலாம். இருட்டடிப்புச் செய்யலாம். ஆனால் அவர் எழுதிய பலவகைப்பட்ட கதைகளையும் அவருடைய விடாமுயற்சியையும் நன்மனமுடையவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. வாழ்த்தாமல் இருக்க முடியாது.

பலவகைக் கதைகள் — பலவித முயற்சிகள் — என்று கூறினேன். அவை என்ன? அவர் எப்படிப்பட்ட கதைகளை எழுதுகிறார்? அவர் பார்வைகள் எங்கெல்லாம் பட்டிருக்கின்றன? இந்த வினாக்களுக்கு விடை காண்பதன் மூலந்தான் நாம் செங்கை ஆழியானை இனம் காணமுடியும்.

அவருடைய ''ஆச்சி பயணம் போகிறாள்'' என்ற நாவல் மெல்லிய நகைச்சுவை கொண்ட படைப்பு. ''கொத்தியின் காதல்'' சமுகத்தில் புரையோடி இருக்

கும் சில குறைகளை எடுத்துக்காட்டி நல்ல கற்பனையோடு எழுதப்பட்ட நகைச்சுவைக் கதை, "முற்றத்து ஒற்றைப் பனை" சாதாரண மனிதர்கள் சில விடயங்களில்—பொருட்களில் வைக்கும் அபரிமிதமான ஆசையை எடுத்துக்காட்டும் மனோதத்துவ ரீதியான கதை. தனது பனை தறிக்கப்பட்டதும் இறந்துவிடும் அந்தக் கிழவர் மாரிமுத்தர் அழியாத சித்திரம். அது ஒரு குறுநாவலாக இருந்தாலும் செங்கை ஆழியானுக்குப் பெருமை தரும் படைப்பு. வானொலி நாடகமாகச் செய்யப்பட்ட போது அது இன்னமும் வெற்றியைப் பெற்றது.

இவற்றைவிட அவர் எழுதிய பெரிய நாவல்கள் வேறு களத்தில் வெவ்வேறு கோணத்தில் எழுதப் பட்டவை. "வாடைக்காற்று" நெடுந்தீவைக் களமாகக் கொண்டு வாடி அமைத்து மீன்பிடித் தொழில் செய்யும் மக்களின் இன்ப துன்ப நிகழ்ச்சிகளைக் கூறும் கதை. இக்கதையின் அமைப்பையும் வெற்றியையும் கண்ட அன்பர்கள் முக்கியமாக குரும்பசிட்டி அன்பர்கள், அதைத் திரைப்படமாகத் தயாரித்தார்கள், இது செங்கை ஆழியானின் கதை அமைப்பிற்கு ஒரு வெற்றி.

"பிரளயம்" என்ற அடுத்த நாவல் வண்ணார் பண்ணையிலுள்ள நரியன்குண்டுக் குளத்தையும் அதன் சுற்றுடலையும் நிலைக்களனாகக் கொண்டது. சேலை தோய்க்கும் சலவைத் தொழிலாள சமூகத்தின் வாழ்க்கையையும், அவலத்தையும், மேல் சாதியென்போரின் சாதி அகம்பாவத்தையும் சித்தரிக்கும் நாவல். மேல் சாதியென வீம்பு பேசும் கூட்டத்தில் இருக்கும் ஆண்மையுள்ள வாலிபன் ஒருவன் தன் அண்ணன் செய்த முறை தவறிய நடத்தைக்காக தானே சலவைத் தொழிலாள சமூகத்துப் பெண்ணைக் கைப்பிடிக்க முன்வரும் புரட்சிக் கதை. இந்நாவல் 1975 இல் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக் கொண்டது.

வாடைக்காற்றையும், பிரளயத்தையும் வெளியிட்ட வீரகேசரி நிறுவனமே செங்கை ஆழியானின் "இரவின் முடிவு" என்ற நாவலையும் வெளியிட்டுள்ளது. அதை இன்னமும் வாசிக்கும் பேறு கிட்டவில்லை. ஆனால் அது ஈழநாடு தன் பத்தாண்டு நிறைவிற்காக நடாத்திய நாவல் போட்டியில் பரிசிலைப் பெற்ற நாவலென அறிகின்றேன். அது பரிசு பெற்ற போதே அதைப்பற்றி பேசியுள்ளேன். அது ஒரு சுருட்டுத் தொழிலாளியின் வாழ்வு பற்றிய குடும்பச் சித்திரம் என்பது என் ஞாபகம். நல்லதொரு நாவலென நடுவராக இருந்த அன்றே என் மனதில் அது பட்டிருந்தது.

"காட்டாறு" வீரகேசரியின் 50 ஆவது நாவலாகப் பிரசுரமாக 1500/- ரூபா பரிசு பெற்ற நாவல். சாகித்திய மண்டலப் பரிசினைப் பற்றிப் புறங்கூறுவோர் வீரகேசரிப் பரிசைப்பற்றி என்ன சொல்லப் போகின்றார்கள்? இந்தக் குறு நாவல்களையும் பெரு நாவல்களையும் தவிர செங்கை ஆழியான், இதயமே அமைதி கொள் என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டிருக்கிறார். சுதந்திரன், ஈழநாடு, கலைச் செல்வி ஆகிய பத்திரிகைகள் நடாத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசில்களைப் பெற்றவர்: நாவலர் நூற்றாண்டினை முன்னிட்டு நடாத்தப்பட்ட நாடகப்போட்டியில் முதற் பரிசினைப் பெற்றவர் செங்கை ஆழியான்.

நாவல், சிறுகதைகளை விட அவர் "வழுக்கியாறு" பற்றி எழுதிய சித்திரமும் போற்றக்கூடியதே. யாழ்ப்பாண மாதா மலடி என்ற பெயர் கேளாமல் சத்திர சிகிச்சை மூலம் பெற்றெடுத்த குழந்தை அது. அதைப் பற்றி யார் கவனித்தார்கள்? சிலர் ஒரு வரியிற் பாடியிருக்கிறார்கள். செங்கை ஆழியான் அருமையாக சிறு நூல் அளவிற்கு நல்ல சித்திரமாகவல்லவா தீட்டியிருக்கிறார்?

அவருடைய இன்னொரு நூல் சுருட்டுக் கைத் தொழில் பற்றியது. யாழ்ப்பாணத்து முக்கிய குடிசைத் தொழிலைப் பற்றி ஏனோ தானோ என்று எழுதாமல்

சரியான புள்ளி விபரங்களுடன் எழுதப்பட்டது இந் நூல். இந்த நூலுக்கு நானே அணிந்துரை வழங்கி யுள்ளேன்.

குறுநாவல்கள், நாவல்கள், சிறுகதைகள், நாட கங்கள் என்பனவற்ருேடு அவருடைய ஆற்றல்கள் நின்றுவிடவில்லை. இலக்கிய உலகில் செங்கை ஆழியான் என்ற பெயர் எவ்வளவு தூரம் பரவலாகப் பேசப்படு கின்றதோ, அவ்வளவுக்குக் கல்லூரி மாணவர்கள் மத் தியில் பூமிசாத்திரப்பாட நூல்களுக்காக குணராசா என்ற பெயர் புகழோங்கியிருக்கின்றது. தமிழில் பூமி சாத்திரத்தை இலகுவாக்கியவர் குணராசா என்பது மறுக்க முடியாத உண்மை.

இன்னும் செங்கை ஆழியானைப் பற்றிச் சொல்ல எவ்வளவோ இருக்கின்றது. முக்கியமாக செட்டிகுளத் தில் அவரது வாடைக்காற்று புத்தக வெளியீட்டில் அன்று நடந்த இன்ப நினைவுகள் என் மனத்திரையில் எழுகின்றன. முக்கியமாக அங்கு வந்திருந்த எழுத் தாளருக்கு நடந்த கௌரவம். வழிநெடுக நடந்த வரவேற்பு. நான் செங்கை ஆழியானுக்குப் பொன் ஞடை போர்த்து அவரின் இலக்கிய முயற்சிகளைப் பற்றிப் பேசிய விதம் எல்லாம் ஞாபகத்தில் எழுகின்றன.

இது மாத்திரமல்ல —

சென்ற மாதம் அவரது "காட்டின் அழகு" என்ற உரைச்சித்திரத்தை வானெலியில் ஒலிபரப்பினுர்கள். எத்தனையோ புலவர்கள் ஆற்றையும் காட்டையும் வர்ணித்திருக்கிருர்கள். ஆனுல் அருவியாற்றையும் மதவாச்சிப்பகுதிக் காட்டையும் நடைச் சித்திரமாக்கி அங்கு வாழும் மிருகங்கள், பாம்புகள், பறவைகள் அவற்றின் இயற்கைத் தன்மைகள் இவற்றை அப்படியே படம் பிடித்து, அவற்றினிடையே மனிதர்களின் குண குணங்களைச் செருகி. எழுதியிருந்த முறை மிகக் கவர்ச்சி யாக இருந்தது. தமிழ் நாட்டில் இவர் எழுதுகிருர். ஈழத்தில் அவர் எழுதுகிருர் என்றெல்லாம் பேசும் அன்

பர்களுக்கு ஒரு வார்த்தை; காட்டின் அழகு என்ற இந்தச் சித்திரத்தை ஒரு முறை கேளுங்கள். செங்கை ஆழியானைப் பற்றி ஈழம் நிச்சயம் பெருமைப்படலாம் என்ற முடிவிற்கு வருவீர்கள்.

இன்னும் செங்கை ஆழியான் ''புவியியல்'' என்ற அறிவியற் பத்திரிகையை நடத்தியிருக்கிறுர். ''விவேகி'' என்ற இலக்கியப் பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவ ராக இருந்திருக்கிறுர். யாவற்றிலும் செங்கை ஆழியா னின் திறமை வெளிப்பட்டிருக்கின்றது.

இறுதியாக வாழ்த்து என்று தொடங்கி கொஞ்சம் கூடுதலாகச் சொல்லி விட்டேன் போல இருக்கிறது. அதனுல் என்ன? ''என்ன செந்தி?...'' என்று கேட் பார் இலங்கையர்க்கோன். ''செந்தி மாஸ்ரர்'' என் பார் ஜீவா. ''என்ன மாஸ்ரர் ...'' – இது டானியல். ''என்ன எப்படிச் சட்டம்பியார்?'' – இது வீரகேசரி நிருபர் செல்லத்துரை. ''வாத்தியார் என்ன புதினம்?'' – இது கலைப்பேரரசு பொன்னுத்துரை. அடிக்கொரு தரம், ''ரசிகமணி'' என்பது எஸ். பொன்னுத்துரை. இவை எல்லாம் அடிமனதில் இருந்து வரும் அன்பான வார்த்தைகள் தாம். இந்த வார்த்தைகளின் ஊடே, ''இரசிகமணி ஐயா...'' என்று பரிவுடன் ஒரு வார்த்தை கேட்கின்றது. அது என் காதில் இனிக்கிறது. ஆம். இந்த வார்த்தைக்குரியவர்கள் இருவர். ஒருவர் செங்கை ஆழியான். மற்றவர் செம்பியன் செல்வன். அந்த அன்பு வார்த்தைக்குரிய ஆழியானை வாழ்த்து கிறேன். இன்னும் பல சாதனைகள் புரிந்து பல காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றேன்.

— வணக்கம் —

**குரும்பசிட்டி.**
*10—6—1976*

அன்பன்
**கனக செந்திநாதன்**



என்னை
இந்நிலைக்கு
உயர்த்திய
என் இனிய
அன்னைக்கு
இந்நூல்
சமர்ப்பணம்.

# பதிப்புரை

யாழ் இலக்கிய வட்டம் தனது 29 வது வெளியீடாக செங்கை ஆழியானின் 'அக்கினிக் குஞ்சு' குறுநாவல் தொகுதியை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றது. இலக்கியம் மனிதகுலநேயத்தையும், ஏற்றத் தாழ்வற்ற உன்னத சமூகத்தையும் உருவாக்க வேண்டுமென்ற உன்னத நோக்குடையது, யாழ் இலக்கிய வட்டம், பழைமையைப் போற்றுவதும் புதுமையை வரவேற்பதிலும் நாம் பின் நிற்பவர்களல்லர்.

செங்கை ஆழியான் நாடறிந்த எழுத்தாளர்: பல் துறைகளிலும் முன்னணி வகிக்கும் எழுத்தாளர்: சிறந்த நாவலாசிரியர்: பரிசில்கள் பல பெற்றவர். 1975 ஆம் ஆண்டு அவரது 'பிரளயம்: என்ற நாவலும், 1977 ல் அவரது 'காட்டாறு' என்ற நாவலும் சாகித்திய மண்டலப் பரிசில்களைப் பெற்றவையாகும். 'காட்டாறு' என்ற நாவல், ஈழத்து நாவலிலக்கியத்தில் ஒரு மைல் கல் என்பது பலரது ஏற்கத்தக்க கருத்தாகும். அண்மையில் சென்னை நியூ செஞ்சரி புக் ஸ்தாபனத்தார் அவரின் 'ஒரு மைய வட்டங்கள்' என்ற குறுநாவலை வெளியிட்டுள்ளனர். அதனை அடுத்து 'அக்கினிக் குஞ்சு' என்ற இக் குறுநாவல் தொகுதியை வெளியிடுவதில் யாழ் இலக்கிய வட்டம் பெருமையடைகின்றது.

குரும்பசிட்டி:
10—12—82

ஏ. ரி. பொன்னுத்துரை
யாழ். இலக்கிய வட்டத் தலைவர்

## ஆசிரியரின் ஏனைய நூல்கள்:

- நந்திக்கடல் — யாழ் இலக்கிய வட்ட வெளியீடு
- ஆச்சி பயணம் போகிறாள் — யாழ் இலக்கிய வட்ட வெளியீடு
- அலைகடல்தான் ஓயாதோ? — சிரித்திரன் வெளியீடு
- சித்திரா பௌர்ணமி — சிரித்திரன் வெளியீடு
- முற்றத்து ஒற்றைப்பனை — சிரித்திரன் வெளியீடு
- இதயமே அமைதி கொள் — சிரித்திரன் வெளியீடு
- கொத்தியின் காதல் — மாணிக்கம் பிரசுரம்
- வாடைக்காற்று — வீரகேசரி வெளியீடு
- பிரளயம் — வீரகேசரி வெளியீடு
  (சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற நாவல் — 1975)
- செங்கை ஆழியான் கதைகள் — ரேகா வெளியீடு
- இரவின் முடிவு — வீரகேசரி வெளியீடு
  (ஈழநாடு நாவல் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாவல்:
- காட்டாறு — வீரகேசரி வெளியீடு
  (வீரகேசரி நாவல் போட்டியில் முதற் பரிசு பெற்ற நாவல்)
  சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது — 1977)
- கங்கைக்கரை ஓரம் — வீரகேசரி வெளியீடு
- யானை — வரதர் வெளியீடு
- கனவுகள், கற்பனைகள், ஆசைகள் — வீரகேசரி வெளியீடு
- ஒரு மைய வட்டங்கள்
  — நியூ செஞ்சரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை
- காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்
  — சுஜாத்தா பப்ளிகேஷன்ஸ்

# யொகாரு

## 1

கண்டல் காடுகள் கருகித் தீய்ந்து போயிருந்தன. காலந் தப்பிய மழையின் வஞ்சத்தினால் உழுது விதைப்பதற்கு ஆயத்தமாகக் கிடந்த வயல்கள், புழுதியை வாரி இறைத்தன. உப்புச்சாம்பல் பூத்த கடற்களப்புகள் பாளம் பாளமாக வெடித்து வானத்தை நோக்கி இரங்கி இருந்தன..

உச்சி வெயிலின் கொடூரத்தினிடையே கூப்பன் அரிசியைத் தலையில் சுமந்தபடி வயல் வரம்புகளைத் தாண்டி கடற்களப்பின் பாளவெடிப்புக்களிடையே யொகாரு வருகின்றாள். ஒவ்வொரு திங்கட்கிழமையும் கூப்பன் அரிசி எடுக்க மூன்று மைல்கள் நடுவெயிலில் அவள் நடந்தே ஆகவேண்டும்.

உப்பங்கழியின் அருகேதான் அவளது கால் ஏக்கர் மேட்டுக்காணி இருக்கின்றது அதுவும் வருடத்தில் நான்கு மாதங்கள் வெள்ளத்தினுள் அமிழ்ந்து போய்க் கிடக்கும். அந்த வெள்ளத்தினுள் அவளும் அவளது ஐந்து ஜீவன்களும் வாழ்ந்தே தீரவேண்டும்.

பதைபதைக்க ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டிருந்த யொகாருவின் உள்ளத்தில் ஒரேயொரு கேள்வியே தேங்கி நிற்கின்றது. 'மூத்தவள் இளைசுகளைக் கவனமாகப் பார்க்கிருளோ? அல்லது எங்கையாவது கண்டல் காடுகளுக்க திரியுருளோ! உம்மா இரிக்கக்குள்ள இந்தக் கஷ்டம் இல்லை...'

யொகாருவின் மூத்த மகள் வல்கிசுக்குப் பதினைந்து வயதுதான் ஆகிறது. வயதுக்கு மீறிய வளர்ச்சி, வறுமையின் கோரப்பிடியில் நாளாந்தம் அரைவயிறும் கால்வயிறுமாக உண்டும் இயற்கை அவளது வளர்ச்சியில் குறைவைக்கவில்லை தாழைமரத்தைப்போல வேகமாக வளர்ந்து விட்டாள். தாயின் பழைய சேலையைக் கிழித்துத் தாவணியும் போடுகிருள்.

'காடை கடைப்புலிகள் நிறைஞ்ச இந்தப் பாழும் உலகத்தில ஆண்டவன் எனக்கு இப்படியும் ஒரு கஷ்டத்தைத் தந்திட்டான்.'

யொகாரு வேகமாக நடக்கிருள் வழக்கத்திலும் பார்க்க இன்று நேரமாகி விட்டது. கூப்பன் கடையில் அதிக சனம். 'கியூ'வில் நின்றுதான் இன்று அரிசி எடுக்க வேண்டியதாகிவிட்டது. கடை மனேச்சர் ஹமீட் வேறு இன்று ஏதோ கோபமாக இருந்தான். சங்கக் கடையில் ஏதோ குறையுதாம்.

'எடுக்கிறது ஓசி அரிசி கொஞ்சம் நிண்டால் என்ன? போங்க போங்க...' என்று எரிந்து விழுந்தான். தன் வயலில் விளைத்த அரிசியை ஊராருக்கு அள்ளிக் கொடுப்பது போல அவனுக்கு நினைவு.

'இல்ல வாப்பா, நாங்க விடியச்சாமம் இருந்து இஞ்ச நிற்கிறம்' என்ருள், ஆசியா உம்மா. எட்டரை மணிக்குத் திறக்கவேண்டிய கூட்டுறவுச் சங்க கடையைப்

பத்து மணிக்குத் திறந்தது மெய். ஹமீட் காக்கா வீற்கு மலேயில் கொஞ்சம் 'ஜோலி' இருந்ததால் சிறிது சுணக்கம். அதை ஓசி அரிசி வாங்குகிற ஆசியா உம்மாக் கிழவி சுட்டிக்காட்டுவதா?

'போடி அங்காலே ...' என்று ஏசி விட்டான். அதனுல், அவளுகக் கூப்பிடு மட்டும் ஒதுங்கி நின்ருள், யொகாரு.

கடைசியாக அவளுடைய கூப்பனே வாங்கிப் புள்ளிகளே வெட்டினுன். வெட்டும்போது தனது காவியேறிய பற்கள் தெரியச் சிரித்தான். யொகாரு அவனைப் பார்க்காமல் கடையினுள் எதையோ வெறிக்கப் பார்த்தாள்.

வேலி இல்லாத தோட்டம் அவள். ஒருகாலத்தில் தனது அழகால் அந்தக் கிராமத்தையே கலங்க அடித்தவள் தான். இப்போதும்தான் என்ன? யொகாருவிற்கு முப்பத்தொரு வயது. பதினறு வயதில் அவள் நிக்காஹ்செய்து கொண்டாள். அவளாக விரும்பியே இஸ்மாயிலேக் கைப்பிடித்தாள். பதினெரு ஆண்டுகள் வரை தோட்டம் வேலியினுள் பாதுகாப்பாகவே இருந்தது.!

ஏதேதோ வெல்லாம் நடந்து போய்விட்டன.

'ஏன் யொகாரு, எப்படி இரிக்கே?...' என்று ஹமீட் கேட்டான்.

'அரிசியைத் தாங்க. வீட்டில புள்ளயதனிய......' என்ருள் யொகாரு.

'டே, மஜீத்து அரிசியைத் திலாசில கொட்டுடா...' என்று கடையினுள் ஹமீட் குரல் கொடுத்தான். அவனுடைய கண்கள் கிழிந்த அவளுடைய மார்புச் சேலேயினூடே பதிந்து தெறித்தன. யொகாரு சேலேத்தலேப்பைக் இழுத்து மூடியபடியே இறங்கினுள்.

வியர்வைத்துளிகள் உதட்டை நனேத்து உப்புக்கரித்தன. கண்டல் மரங்களின் கீழ் நின்றபடியே மாடுகள் இளேப்பாறிக் கொண்டிருந்தன. வெட்கம் கெட்ட நாம்பன் ஒன்று இந்தவெயிலிலும் பசு ஒன்றைத் துரத்தியது.

யொகாறு நடக்கின்ருள். தலேயில் ஏறிய அரிசிச் சுமை அதிகமல்ல. நான்கு மாதங்களுக்கு முன் அவள் தலேயில் இருந்த சுமை அதிகம்தான்: அன்று ஆறு கூப்பன் அரிசிச் சுமை.

இன்று-?

மூன்று கூப்பன் சுமைதான்.

அக்கூப்பன்களின் பயனே ஹாஜியார் அபுதாலிப்தான் அனுபவிக்கின்ருர்.

யொகாறுவின் தாய்க்கிழவி, எங்கெங்கோ எல்லாம் திரிந்து அலேந்து விட்டுக் கடைசியில் மகளிடம் வந்து சேர்ந்தாள். வைக்கிற கஞ்சியில் கொஞ்சம் கிழவிக்கு கிடைத்தது. குடிசைக்கு காவலாக வெளித்திண்ணேயில் முடங்கிக் கிடந்த கிழவி இருந்தாற்போல 'மௌத்'தாகி விட்டது. மையத்தை' அடக்கம் செய்வதற்கு யொகாறு எங்கு போவாள்?

பைத்துன் கிழவிதான் அதற்கு வழி சொன்னுள்

'ஹாஜியாரிட்டை கேட்டுப்பாரு .. கடனுகக் கேட்டுப்பாரு தருவாரு . ஒங்கட கூப்பன் பொஸ்தகத்தையும் கொண்டுபோ .. ஒரு கூப்பனுக்கு இருபது ரூபா தருவாரு... ஈடு வைச்சு இப்பத்தை கருமத்தைப் பாரு...'

இந்த உப்பங்கழி ஏழைகளிடம் அடைவு வைப்பதற்கு இருக்கின்ற ஒரேயொரு பொருள் கூப்பன்தான். ஏழைகளிடம் இருந்து கறப்பதற்குப் பணக்காரன் எத்தனே வழிகளேக் கண்டுபிடித்திருக்கிருன்.

யொகாருவிற்கு அன்று வேறு வழி ஏதும் தெரிய வில்லை. மூன்று கூப்பன்களை மடியில் கட்டிக்கொண்டு ஹாஜியார் வீட்டை நோக்கி ஓடினாள்.

ஹாஜியார் மிகவும் தாராளமானவர்.

'உனக்கு இப்ப காசி தேவையெண்டால் மத்தக் கூப் பன் பொஸ்தகங்களையும் கொண்டுவா, மகள்... தாறன் அந்திரமாபத்துக்கு ஒதவாட்டில் என்ன மனுசன்'

ஒவ்வொரு மாதமும் வண்டிலில் ஹாஜியார் வீட் டுக்குக் கூப்பன் அரிசி மூடை மூடையாகப் போகிறது. இல்லாவிடில், ஹாஜியாருக்கு வயல்கள்...தோட்டங்கள் மில்கள்... வீடுகள் லொறிகள்... எங்கிருந்து வந்தன? யொகாருவிற்குக் கூப்பன் அரிசி போதுமானதல்ல. மூன்று இருத்தல் அரிசி ஏழு நாட்களுக்குப் போதுமா? கூப்பன்களை அடைவிலிருந்து மீட்டுவிட அவள் முயன் றாள். போனவாரம் வீட்டில் வளர்த்த கோழிகள் நான்கையும் திருகோணமலைக்கு விற்பதற்கு வாங்கிச் செல்லும் செயினம்புவிடம் இருபது ரூபாவுக்கு விற்றாள். அறவிலைதான். முட்டை இட்ட கோழிகள்.

இருபது ரூபாவை எடுத்துக்கொண்டு ஹாஜியாரிடம் விரைந்து போனாள். ஒரு கூப்பனையாவது மீட்டு விட லாம் என்ற நம்பிக்கை.

'என்ன மகள்... மத்தக் கூப்பன்களையும் ஈடு வைக் கப் போறியா? இப்ப நான் இருபது குடுக்கிறதில்ல... ஏனெண்டா சரியான நஷ்டம். ஏதோ ஏழைகளுக்கு உதவுறத்துக்கு அல்லாஹ் படைச்சான்' என்று ஹாஜியார் வரவேற்றார்.

'இல்ல வாப்பா... என்ரை கூப்பன்ல ஒண்டை மூளு றத்துக்கு வந்தன்... இருவது ரூபா இருக்கி...' என்று யொகாரு இழுத்தாள்.

ஹாஜியாரின் முகம் ஓடிக் கறுத்தது.

'நீ மகள் ஒண்டாத்தான் கூப்பன் அடைவு வெச்சாய்... தனித்தனிய குடுக்க ஏலாது. உனக்காக வேணுமின்ஞு, இந்த இருபதைத்தா... இப்படி அறுபது ரூபாவும் வட்டியும் தந்து முடிஞ்சப்பொறவு கூப்பன்களைத் தாறன்...'

'வட்டியுமா...? கெழுமைக்குக் கிழமை அரிசி எடுக்கிறியள் தானே, வாப்பா..?' என்று விக்கித்து நின்ருள், யொகாறு. ஹாஜியார் சிரித்தார்.

'இந்தப் பஞ்சகாலத்தில ஊர் ஒலகம் தெரியாமல் பேசாத, மகள். ஒனக்குத்தந்த காசி இருந்தால் எனக்கு ஒரு மாதச் சீவியம் போம்...,

கடைசியில் வென்றது ஹாஜியார் தான்.

தூரத்தில் யொகாறுவின் குடிசை தெரிகின்றது. தென்னைக்குக்கீழ் மகள் வல்கிசு நிற்கிருள். யாரோ வாசல் படலையில் இருந்து நடந்து போகிருர்கள்.

'ஆரோ ரோட்டில போவுனமாக்கும் எண்டாலும் வயசுவந்த புள்ள, முத்தத்தில நிக்குதே...? நச்சுக்கண் பட்டிடும்..'

## 2

குடிசைத் திண்ணையில் அமர்ந்து இருக்கிருள், யொகாறு. வெயிலின் கீழ் நடந்து வந்ததால், கண்கள் திடீரெனச் சில கணப்பொழுதுகள் இருண்டன.

'தண்ணி கொண்டுவா, மகள்..'

'தண்ணி அள்ளயில்லே, உம்மா இதோ கொண்டு வாறன்' என்றபடி வல்கிசு மண்குடத்தையும், கிணற்று வாளியையும் தூக்கிக்கொண்டு கிணற்றடிக்கு ஓடினுள்.

'இவ்வளவு சாமமும் நீ என்னடி செஞ்சணி...? சும்மா திரிஞ்சியா ?'

வல்கிசு கிணற்றடிக்குச் சென்றுவிட்டாள். திண்ணைக் குந்தில் இருந்தபடியே குடிசைக்குள் பார்த்தாள். யொகாரு. குழந்தைகள் மூன்றும் ஓலைப்பாயில் சிதறிக் கிடந்து தூங்கின. மூத்த பையன் கரைவலை மீன் பொறுக்கப் போயிருப்பான்.

'புள்ளயளத் தூங்க வைச்சிட்டு இவள் என்னத்தைச் செய்தாளோ…?

திண்ணையில் இருந்தபடி பார்வையை வெளியே யொகாரு மேயவிடுகிறுள். காட்டுத்தடிகளை ஊன்றி, கம்பியால் அடைக்கப்பட்ட வேலி. அவை எவ்வளவு இனிய நாட்கள்...?

இஸ்மாயில் உப்பாற்றில் தோணி ஓட்டிவந்தான். அவனுடைய தோணியில் வன்னியனுர் (காரியாதிகாரி) அடிக்கடி போய்வருவார்.

'சேர் எனக்குக் குடியிருக்கக் காணித்துண்டில்ல...' என்று ஒருநாள் அவரிடம் முறையிட்டான்.

அவர் அவனைக் கூடவே வண்டிலில் அழைத்து வந்து இந்தக் காணியை காட்டி, 'இதைத் திருத்திக் குடியேறுடா பேமிட் தாறன்' என்ருர்.

அன்று குடியேறிய குடும்பம். பதின்மூன்று ஆண்டுகளாகி விட்டன. இன்று இக்காணியில் காய்த்து நிற்கிற ஒவ்வொரு தென்னையும் இஸ்மாயில் தான் ஆசையோடு வைத்தான்.

'உர்'ரென்ற இரைச்சலோடு கண்டல் காற்று வீசுகின்றது. உப்பங்கழியின் பாளம் வெடித்த மேனியிலிருந்து புளுதி வாரி இறைக்கப்படுகின்றது.

'யொகாரு என் ஆசை யொகாரு...'

கண்டல் காடே அதிரும்படி வீரிட்டு எழும் அக்குரல்...? அது குரலா...? அல்லது காற்று...? நினைவா...?

'ஐயோ...' என விம்முகிருள், யொகாரு.

உப்பங்கழித் தரையிலிருந்து புளுதிவாரி இறைக்கப்படுகின்றது. வாரி இறைக்கப்படும் புளுதியினூடே இரட்டைக் கரத்தை வண்டில் ஒன்று விரைந்து செல்கின்றது. 'இந்தா... இந்தா... ஏய்...' என்ற வண்டியோட்டியின் அதட்டலோடு 'ங்.. ங்... ங்...' என்று மாடுகளின் கழுத்து மணிகள் சப்திக்கின்றன.

ஒருகணம் வண்டியையே வெறித்துப் பார்க்கிருள்.

அவளது கண்கள் முன் இஸ்மாயிலின் கம்பீரமான உருவம் தெரிகின்றது. அவளது விழிகள் கலங்கித் தவிக்கின்றன. இதே போன்ற ஒரு நாளில்தான் அந்தச் சம்பவம் நடந்தது.

இஸ்மாயில் கலியாணம் செய்ததும் தோணி வலிப்பதை விட்டுவிட்டான். கையில் கொஞ்சம் பணம் இருந்ததால், ஒரு வண்டியும் ஜோடிச் செவலைக் காளைகளும் வாங்கினான். செங்கட்டி, மணல், சீமெந்து, மீன்பெட்டி, மரம் என்று ஏற்றி இறக்கி, சலிக்காமல் உழைத்தான்.

தம்பலாகாமத்துக் காளை மாடுகள். 'ரேஸ்' குதிரைகள் போலக் கம்பீரமாக நடை பயில்வன. சலிக்காமல் நுரை தள்ளாமல் அரைநாள் நடக்கக்கூடியன.

பூவரசந்தீவு முழுவதும் அவனுடைய காளை மாடு களைப்பற்றியே பேச்சு அடிபட்டது. அந்த மாடுகளை நல்ல விலைக்கு வாங்கவும் பலர் முயன்றனர்.

யொகாரு பெருமூச்சு விடுகிறாள்.

இத்திண்ணையில் தான் அன்று இரவும் இஸ்மாயிலும் அவளும் படுத்திருந்தார்கள். குடிசையினுள் பிள்ளைகள் தூங்கின. அவள் தன் மடியில் கடைசி மகளை வளர்த்திப் பால் புகட்டிக் கொண்டிருந்தாள்,

நல்ல நிலவு. கண்டல் காடு தண்ணொளியில் மூழ்கித் தவித்தது.

'யொகாரு... என் ஆசை யொகாரு...' என்று அவன் அழைத்தான். குறும்பும் செய்தான்.

'சத்து நேரம் சும்மா இரிங்க...' என்று அவள் சிணுங்கினாள். 'வருஷத்துக்கு ஒன்றுப் பெத்தும் உங்களுக்கு இன்னம் ஆசை போகவேயில்லை'

அவன் சிரித்தான் 'ஒன்னோடே எனக்கு இரிக்கிற ஆசை ஒருக்காலும் போகாதடி யொகாரு. புள்ளய உள்ளக்கு கெடத்திட்டு சுறுக்கா வா...'

அவனுடைய அரவணைப்பிற்குள் அவள் மூழ்கிக் கிடந்தாள். கடைசி அணைப்பு.

'யொகாரு என் ஆசை யொகாரு'

'...ம்'

அன்று வெகு நேரம் அவர்கள் விழித்திருந்தார்கள். அவன் வெகு நேரம் பேசினான்.

'இண்டைக்குக் ஹாஜியாருக்கு நாலு வாட்டி செங்கல் ஏத்திப்பறிச்சன். வழியில செய்யத்தைக் கண்டன்... அவன்தான் மாட்டிறைச்சி விக்கிற செய்யத்து... அவன்ரை ஆசையைப்பாரு, யொகாரு... ஆயிரம் தாரு ணும்... ரெண்டு செவலையையும் தந்திடட்டாம்... மறுவா மறுவா கேட்டான். ஒரு மாதிரி வெருட்டியும் கேட்டான்...நான் ஏலாதெண்டிட்டன்'.

'அவன் கூடாதவன்...? நம்ம மார்க்கத்திக்கு மாறு நடக்கிறவன். பள்ளிவாசலிலே, ,ஹத்' தடி வாங்கியவன்...அவனோட கொழுவினியளா?...' என்று பதறினாள், யொகாரு.

'நீ ஏன்றி அவனுக்குப் பயப்படுகிறாய்?...இந்த இஸ்மாயீலே அவன் என்ன செய்திடுவான்...' என்ற அவன் சிரிக்கத் தொடங்கினான்.

'ஏன் சிரிக்கிறியள்...?'

'மட்டையடி வாங்கிய காட்சியை நினைச்சுக் கொண்டன்... கூப்பன்கடை ஹமீத்திர பொஞ்சாதியோட செய்யத்துக்குக் கள்ளத் தொடர்பு... ஊருக்குத் தெரிந்து போச்சுது கையும் களவுமாகப் பிடிச்சுப் போட்டான்கள்... பள்ளிவாசல் மரைக்கார் விசாரிச்சாரு... குத்தத்த ரெண்டு பேரும்...'

'எனக்கு இதெல்லாம் தெரியும் தானே. மௌலவி மரைக்கார் இருவருக்கும் மூப்பது முப்பது மட்டையடி கொடுக்கச் சொன்னாரு...'

'பனம்மட்டை முதுகில படேக்க செய்யத்து கத்து கத்தெண்டு கத்தினான்..'

'இப்ப என்ன அவங்க ரேண்டு பேரும் ஒண்டாத் தான் இரிக்கிறாங்க...'

'ஆமா இனி செய்யப் போறியள் என்று மரைக்கார் கேட்டார். காவின் எழுதப் போறம் என்ருன் செய்யத்து. சரி மூன்று மாசம் ஒருத்தரை ஒருத்தர் பாக்காம இருந்திட்டாக்கா செய்து கொள்ளுங்கள் என்ருரு...'

'பாவம் ஹமீட் காக்கா... மனிசியைப் பறி குடுத்திட்டாரு...' என்று யொகாரு சிரித்தாள்.

'பொட்டையன்...'

தூரத்தில் சாமக் கோழி ஒன்று கூவியது. அதன் பிறகு தான் அவர்களை உறக்கம் தழுவியது. விடிந்து வெகு நேரமாகியும் அவர்கள் எழும்பவில்லை. வல்கிசு தான் எழுப்பினுள்.

'வாப்பா... வாப்பா......... நம்மடை வலக்கன் செவலை ஒண்டக் காணல்ல...'

பதறிப்போய் எழுந்தான் இஸ்மாயில்.

'எங்கயாவது அவுட்டுட்டு போயிரிக்கும்...' என்ருள் யொகாரு.

'ராத்திரி செரியா நாய் கொலைச்சுது...' என்ருள்' வல்கிசு.

இஸ்மாயில் பதறிப் போனுன். வெறி பிடித்தவன் போல வலக்கன் செவலையைத் தேடிக் காடெல்லாம் அலைந்தான்.

'செய்யத்துத் தான் மோசம் செய்துட்டாளுே?' என்று யொகாரு மனதுள் மறுகினுள்.

மத்தியானம் அளவில்தான் வலக்கன் செவலையைப் பற்றிய செய்தி வந்தது. ஆலங்கேணி விதானையார் தான் செய்தி கொண்டு வந்தார்.

"புளியந்துறைக் கண்டல் காட்டுக்கை செவலையை ஆரோ வெட்டிப் போட்டிருக்கிறுன்கள்.... இறைச்சிக்கு கால்தொடைகளை வெட்டி எடுத்துப் போட்டான்கள்..."

'அல்லாஹ...' என்று அலறினுன் இஸ்மாயில்

"நாயனே...' என்ருள் யோகாறு.

பொலிஸ் விசாரணை நடந்தது. செய்யத்துத்தான் செய்தான் என்பதற்கு என்ன அத்தாட்சி?

ஒரு வாரம் நடைப்பிணமாக உலாவினுன் அவன் கொட்டிலில் கட்டிநின்ற இடக்கண் செவலையும் இருப்புக் கொள்ளாது தவித்தது. வண்டிலையும் ஒற்றை மாட்டை யும் வெறித்து வெறித்துப் பார்க்கிற கணவனின் மன நிலையை யோகாறு புரிந்து கொண்டாள்.

தன் கழுத்துச் சங்கிலியையும் மகளின் சங்கிலியை யும் அவன் கைகளில் வைத்துவிட்டு சிரித்தாள்.

'போங்க செவலைக்கு ஒரு சோடி வாங்கிவாங்க... தம்பலகாமத்தில குப்பைத்தம்பி வீட்டில் ஒண்டுநிக்கு தாம்... சலீக்கின் காக்கா சொன்ஞர்...'

மனைவியையே நீண்ட நேரம் கண் கொட்டாமல் பார்த்தான்.

"யோகாறு... என் ஆசை யோகாறு...'

# 3

'உர்'ரென்ற இரைச்சலோடு காற்று புழுதியை வாரி இறைத்தபடி வீசுகின்றது.

'உம்மா... தண்ணி......' என்றபடி பேசினைத் தாயின் முன் வைக்கிருள் வல்கிசு.

பேசினைக் கையில் எடுக்கும்போது மகள் இன்னொரு செய்தியைக் கூறுகிருள்.

'உம்மா, இண்டைக்கு சலீக்கின் காக்காட மீன் வாடியில செரியான சனமாம். கரைவலையில நல்லாச் சூரை பட்டிக்காம், மூன்று நாலாயிரம் பெறுமாம்...'

'ஒனக்கு இதெல்லாம் ஆரு சொன்னு...?' யொகாருவின் கண்களில் கலக்கம்.

'இமாம்தின் மாஸ்ரர் சொன்னுர்...'

மகளை ஒருகணம் ஊடுருவி விடுவது போல யொகாரு பார்க்கிருள்.

'மாஸ்ரர் இஞ்ச வந்தாரா...?'

'வந்தார் உம்மா. சலீக்கின் காக்கா ஒன்னட்ட குடுக்கச் சொல்லி சூரை மீன் ரெண்டு பெரிசு அனுப்பியிருக்காரு...இமாம்தீன் மாஸ்ரர் தான் கொண்டு வந்தார்...'

'நீ வாங்கினியா மகள்...?'

'ஏம்மா...?'

தாயின் விழிகள் திடீரெனச் சிவப்பேறுவதை வல்கிசு கண்டாள். பற்களை நறநற வெனக் கடித்தபடி மகளின் தலைமயிரை ஒரு கையால் பற்றி இழுத்து 'பளார் பளார்' என முதுகில் அறைகிறாள்.

'உம்மா...உம்மா' வல்கிசின் வீரிட்டகுரல் கேட்டு குடிசையுள் பகல், தூக்கம் தூங்கிய குழந்தைகள் விழித்துக் கொள்கின்றன.

மகளை அறைந்த கையால் யொகாறு தன்னையும் அறைந்து கொண்டு அலறினாள்.

'சலீக்கின் கொடுத்தனுப்பிக் கறி ஆக்கிச் சாப்பிட எங்களை இப்படித் தவிக்க விட்டிட்டுப் போட்டியளே...?'

ஆற்றாமை ஒருங்கே உடலை அமுக்கத் திண்ணையில் சாய்கிறாள் யொகாறு. வல்கிசு அரிசியை எடுத்துக் கொண்டு குடிசைக்குள் போகிறாள். கூரை மீன் குழம்பு வாசனை எழுகின்றது.

## 4

புளுதியை வாரி இறைத்தபடி வண்டில் ஒன்று கண்சில் காட்டிற்குள் புகுகின்றது.

'யொகாறு... என் ஆசை யொகாறு...'

விம்மி விம்மி அழுகிறாள்.

'உம்மா...' என்று அழைத்தபடி சிறு பெண் சர்மிளா தாயின் அருகே வருகின்றாள். அவளை அணைத்தபடி யொகாறு அழுகின்றாள்.

அன்று...

, உம்மா வாப்பா மாடு கொண்டு வாருர் .. என்று கடப்பில் நின்று குரல் கொடுத்தாள். வல்கிசு யொகாரு குடிசைக்குள் நின்று ஓடி வந்தாள்.

வெள்ளை நிறக்காளை ஒன்றைப் பிணைத்த கயிற்றைச் கையிம் பற்றியடி இஸ்மாயில் வந்து கொண்டிருந்தான். வாசலில் அவள் நிற்பதைக் கண்ட அவன் குரல் கொடுத்தான் ஏய் யொகாரு...

யொகாரு குழந்தை போல அவனை நோக்கி ஓடிஞள்.

இடக்கன் செவலேக்கு ஏற்று கம்பீரமான ஜோடி தான். வெள்ளை வேளர் என்ற நிறம். நீண்ட தூரம் நடந்து வந்த களைப்புகளை மாட்டில் தெரியவில்லை. அவனில் தெரிந்தது.

வெள்ளைக் காளையைக் கண்ட இடக்கன் காளை மூசியது. அதற்கு அதனைப் பிடிக்க என்பது தெரிந்தது.

'டேய்...டேய்... சும்மா இரிடா , என்று நெற்றியில் தட்டிக் கொடுத்தான் இஸ்மாயில். என்றாலும் செவலே அடங்க மறுத்தது.

இஸ்மாயில் வெள்ளைக் காளையை வலக்கனு வண்டியில் பூட்டிஞன். செவலேயை அவிழ்த்து வந்து இடக்கனைப் பிணைக்க முயன்ருன். செவலே முரண்டு பிடித்து இழுத்தது.

, ஏய் .. ஏய்...' என்று முதுகில் தட்டிஞன். இஸ்மாயில். வெகு தூரம் நடந்து வந்த களைப்பு. இடக்கன் முரண்டுவது இஸ்மாயிலுக்கு கோபத்தை மூட்டியது. அடி கம்பை வாரி எடுத்து 'பளார் பளார்' எனச் செவலேக்கு அடித்தான்.

'அடிக்காதிங்க...' என்று தடுத்தாள் யோகாறு. இஸ்மாயில் அடித்த அடியில் ஒன்று செவலையின் மூக்கில் 'விண்'ணென்று பட்டு இரத்தக் கண்டலை ஏற்படுத்தி விட்டது. அடிக்குப் பிறகுதான் செவலை அடங்கியது.

வண்டியில் பூட்டினான் அவன். செவலை கோபத்தில் மூசியது.

வெளியே காற்று புழுதியை அள்ளி இறைத்தபடி வீசியது. வண்டியில் ஏறி அமர்ந்து 'ஏய் ஏய்' என்று மூக்கணாங்கயிற்றைச் சுண்டினான். மாடுகள் இரண்டும் நடந்து கடப்பை விட்டு வெளியே உப்பங்கழியில் இறங்கின.

இருந்தாற் போல—

செவலைக்கு வெறிபிடித்து விட்டதா ? செவலையின் வேகமான இழுப்பிற்கு ஈடுகொடுப்பது போல வலக்கன் செவலையும் பாய்ந்தது. அவனுக்கும் குஷி பிறந்து விட்டது. 'உய்'யென்று மாடுகளை விரட்டினான்.

சிலகணங்களின் பின் தான் இடக்கன் செவலை கோபத்தில் ஓடுவது அவனுக்குப் புலப்பட்டது. கயிற்றைச் சுண்டி இழுத்து வண்டிலை நிறுத்த முயன்றான். முடியவில்லை.

வேகம், அசுர வேகம்... புழுதி வானை முட்டி நிறைந்தது.

யோகாறு இவற்றைக் கண்டாள் வண்டில் ஒரு பக்கம் குடை சாய்ந்ததையும் கண்டாள். மறுகணம்—

'யொகாரு .. ஐயோ ... என் யொகாரு ' என்ற இஸ்மாயிலின் ஓலம் எழுந்ததையும் கேட்டாள். குடை சாய்ந்த வண்டிலின் கீழ் அகப்பட்ட அவனையும் இழுத்துக் கொண்டு வெகுதூரம் ஓடியபின்பே மாடுகள் நின்றன.

இஸ்மாயில் இரத்தக் களரியில் உடல் பிய்ந்து கிடந்தான்.

' ஐயோ .. ஆண்டவனே ... '

பேய்க்காற்று வீசுகின்றது.

## 5

வேலியில்லாத் தோட்டத்தைத் துவம்சம் செய்ய எத்தனை மாடுகள்?

'யொகாரு, என்னடி பகல் நித்திர செய்யிறாய்?'

அவளைப் பைத்தும் கிழவி எழுப்பினாள். துடித்துப் பதைத்து எழும்புகிறாள் யொகாரு.

' ஏன்ரி அழுதியா?...இஸ்மாயில் பொயித்தான் எல்லாரும் தவிக்கிறீங்க... அவன் இருத்தாக்க எப்படி இருப்பியள் . ? '

' இரிங்க ...' என்கிறாள்: யொகாரு 'கூப்பன் அரிசி எடுக்கப் போனன்... செரியா வெயில் சூடு .. '

பைத்தும் கிழவி காவியேறிய பற்கள் தெரியச் சிரித்தாள், ஒருவிதமாக.

'இண்டைக்கு இவன் சலீக்கினுக்கு நல்லாச் சூரை பட்டுது ... ஒரு வளேப்பிலேயே ஏழெட்டு ஆயிரம் கரைவலையை இழுத்துப் போட்டிருந்தான். நானும் நிண்டன் சாய் ஒரு மீன் தருவான் என்று பார்த்தன் .. ஊகும்.. கடைசியா நானுகக் கேட்டுப் பார்த்தன் ஏசித் தொரத்திப் போட்டான். சும்மா குடுக்க இஞ்ச என்ன வெளேயுது ..ஓடுடீ எண்டிற்ருன் ... ஆரும் குலுக்கி மினுக்கித் திரிஞ்சால் தளுக்கா இருந்தாக்கா அவைங் மீனே வீட்டிற்கும் கொண்டாருவாங் ...'

யொகாருவின் இதயத்தில் சுருக்கென்று முள் ஒன்று தைக்கின்றது. குடிசையிலிருந்து எழுகின்ற மீன் வாசனே அருவருப்பை தருகின்றது. பைத்துன் கிழவி தன்பாட்டிற்குத் தொண தொணக்கிருள். 'இனிமேல் இப்ப புழக்கத்தில இரிக்கிற நூறு ஐம்பது ரூபா செல் லாதாம்.'

'அரசாங்கம் சட்டம் போட்டிருக்கா ... நூறு ரூபா ஐம்பது ரூபா தாள் வெச்சிருக்காங்கள் அதை வேங் கிலே குடுத்து புதிசா மாத்தணுமாம்... உவன் சலீக்கின் ...'

யொகாரு குறுக்கிட்டாள். 'ஏன் இப்ப வந்தீங்க...?'

'எனக்கு அரிசி தேவை... முந்தநாள் வாங்கின மூண்டு சுண்டு அரிசியைத் தாறியா? ஒரு சொட்டு அரிசியும் இல்ல .. '

'தாறேனே ' என்று யோகாரு, மகளேக் கூப்பிடு கிருள்: ' வல்கி.. !'

மூன்று கூப்பன் அரிசி ஒன்பது சுண்டு. இன்று மூன்று சுண்டு சமைத்திருப்பாள். கடன் அரிசி மூன்று சுண்டு போனல், மிகுதி இன்னும் ஆறு நாளுக்குப் போதுமா?

'என்ன உம்மா?...'

வல்கிசை நிமிர்த்து பார்க்க யொகாருவால் முடிய வில்லே. சிறு பெண்ணே மிருகம் போலச் சற்று முன் அறைந்தாளே?

'ஆக்கிற்றியா...?'

"ஓம் உம்மா... கூப்பன் அரிசியிலே ஒரு சுண்டு குறையுது...ஆக எட்டுச் சுண்டுதான் இரிக்கி... அளந்து பார்த்தன்

யொகாருவால் சிலகணம் எதுவும் பேச முடிய வில்லே. விக்கித்துப் போய் இருந்தாள்.

'கூப்பன் கடையில வெட்டிப் போட்டாங்கள் இப்படி எங்கட வயித்தில அடிச்சுத்தானே வீடு கட்டி ருன்கள்...நல்லா இருப்பான்களா?...' என்று பைத்துன் கிழவி திட்டினுள்.

ஒன்பது சுண்டு அரிசியில் ஒரு சுண்டு இல்லே?

'ஏழையோளுற வவுத்தில் அடிக்கிறவங்கள் நல்லா இரிப்பாங்களா? புழுத்துத்தான் சாவன்கள்...' என்று யொகாரு குமுறினுள்.

கூப்பன் கடை ஹமீட்டின் நச்சுச் சிரிப்பும் இச் சைப் பார்வையும் நினேவு வருகின்றது. ஊரான் பெண் டாட்டியை ஆள நினேக்கிற வஞ்சகன், வயிற்றிலும் அடித்து விட்டான். ஒவ்வொரு வீட்டுக் கூப்பனிலும் கால் கொத்து வீதம் குறைத்து அளந்தால், அறுநூறு எழுநூறு வீட்டுக் கூப்பனிலும் கிடைப்பது எவ்வளவு?

'பாவி பாவி...'

பைத்துன் கிழவி அரிசியை வாங்கிக் கொண்டு போய் விட்டாள்.

'உம்மா...' என்ருள், வல்கிசு 'ஈடுவைச்ச கூப்பன் பொஸ்தகங்களே எடுத்தால் நல்லது உம்மா.'

'அதுக்கு வழியில்லயே மகள்... நாற்பது ரூபாவிற்கும் வட்டிக்கும் எங்கை போவன்...?'

'டியாரிட்ட முறையீட்டால் வாங்கித் தருவாராமே?' என்ற மகளே வியப்போடு யொகாரு பார்க்கிருள்.

'ஒனக்கு இதை யார் சொன்ஞங்க...?'

ஒருகணம் மகள் உதட்டைக் கடித்துக் கொண்டாள். யொகாரு தாய்.

'ஆர் ஒனக்கு இதைச் [சொன்ஞங்க'... தாயின் குரலில் தெறித்த கண்டிப்பை வல்கிசு உணர்ந்து கொண்டாள்.

'இமாம்தீன் மாஸ்ரர் சொன்ஞரு..'

'எப்ப?'

'இண்டைக்கி... சல்கீன் காக்காட மீன்கொண்டு வரக்குள்ள...'

'நீ கேட்டியா?'

'அவராத்தான் சொன்ஞரு...' என்று மென்று விழுங்கிஞள் வல்கிசு.

யொகாரு மகளே ஊடுருவிப் பார்த்தாள். கன்னிப் பெண்ணுடன் இமாம்தீன் இதை எல்லாம் பேசியிருக்கிருன். மோசம் வந்து விட்டதோ?

இமாம்தீன் மட்டக்களப்பைச் சேர்ந்த பையன். உப்பங்கழியில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறுன், வீட்டிற்கு முன் வழியால் அவன் அடிக்கடி போய்வருவதைக் கண்டிருக்கிருள். ஒரு போதும் அவன் யொகாறுவின் வீட்டிற்கு வந்தது கிடையாது. ஒரே ஒரு தடவை அவள் இமாம்தீன் மாஸ்ரரை அலுவலாக நாடிப் போயிருக்கிருள்.

அரசாங்க அதிபருக்குத் தனது உதவியின்மையை விபரித்து மாதாந்த உதவிப்பணம் கேட்டு முறைப்பாடு ஒன்றை எழுதப் போயிருக்கிருள். இமாம்தீன் மறுக்காமல் எழுதிக் கொடுத்திருக்கிறுன். அதன் பலனுக அவளுக்கும் பிள்ளைகளுக்கும் மாதா மாதம் அரசாங்கப் பிச்சைச் சம்பளமாகப் பதினைந்து ரூபா கிடைக்கிறது.

அரசாங்கம் தருகின்ற இலவச அரிசியும், இலவச மருந்தும் பிச்சைச் சம்பளமும் இல்லாவிட்டால் யொகாறுவின் குடும்பம் இருந்த இடத்தில் என்றே புல் முளைத்திருக்கும்.

அவன் எழுதித் தந்ததால்தான் தனக்குப் பிச்சைச் சம்பளம் கிடைக்கின்றது, என்ற நன்றியால் அவனைக் காணநேரும் வேளைகளில் யொகாறு நன்றிப் புன்னகை புரிவாள்.

அவன் வல்கிசோடு இன்று பேசியிருக்கிறுன், கூப்பன் விஷயமும் பேசிக்கொள்வதென்முல், நீண்ட நேரம் அவன் இங்கு தரித்து நின்றிருக்க வேண்டும்.

நான் கூப்பன் அரிசியோடு வரும்போது நான் கண்டது இமாம்தீன் மாஸ்ரர் பொடியன் தானு? என்னைக் கண்டு விட்டுத்தான் போனுனே?

யொகாறுவின் இதயம் கனத்தது.

வல்கிசுப் பெண் ஏமாந்து போனுளோ?

'உர்' ரென்று புளுதிக் காற்று வீசுகின்றது. தூரத்தில் யாரோ சைக்கிளில் வருவது தெரிகின்றது. கிட்ட நெருங்கியபோது அது சலீக்கின் எனத் தெரிகின்றது.

சலீக்கீன் கம்பி வேலியோடு சைக்கிளைச் சாத்திவிட்டு உள்ளே வருகின்றுர்.

சலீக்கின் காக்கா, அவர் பணத்தால் தலைமையும் செல்வாக்கும் பெற்றவர். அவரையும் அவருடைய நடத்தைகளைப்பற்றியும் ஊர் நன்கறியும்.

நாற்பத்தைந்து வயது மதிக்கலாம்.

பள்ளிவாசல் 'ஹத்தடி' வாங்கவில்லை என்பதைக் கொண்டு சலீக்கின் காக்கா ஒழுக்க சீலர் என்று அர்த்தமாகாது.

காட்டுக்குள் கட்டை பொறுக்கப்போன வேளைகளில் சலீக்கின் காக்காவை யொகாறு சந்தித்திருக்கிருள். ஒரு நாள் அவர் அவளோடு நடந்து கொண்ட முறை நேர்மையானது அல்ல.

'யொகாறு... நீ ஏன் தனிய இரிக்கிருய்? நீ ஓம் எண்டு சொல்லு.. ஒன்னை நான் வைச்சுக்கொள்ளுறன். உன்ரை குடும்பத்தையும் பார்க்கிறன் '

அவளைக்காணும் வேளைகளிலெல்லாம் சலீக்கின் இவ்வாறு கூறுவார். பைத்துன் கிழவியும் இதையே கூறுவாள். உவர் சலீக்கினுக்கு ஒன்னில ஒரு கண்... பணக்காரன் நீயும் இந்தச்சின்ன வயசில தனிய இருக்கப் போறியா...?'

அந்த வேளைகளில் எல்லாம் இவள் எரிந்து விழு வாள்.

'யொகாரு... என் ஆசை யொகாரு...' என்ற அந்தஇனிய வாத்சல்ய வார்த்தைகளின் முன் அவ ளுக்கு எவரும் எதுவும் தூசுதான்.

வேலியில்லாத தோட்டத்தை துவம்சம் செய்ய எத்தனை மாடுகள்?

'உவன் ஏன் வருகின்றான்?'

'எப்படி இரிக்கே யொகாரு? சூரை நல்லா இரிந் திதா?'

'இரிங்க...' என்றாள், யொகாரு 'மீன் ஏன் அனுப் பினீங்க காக்கா... பார்க்கிறவங்க தப்பா நினைச்சுக் கொள்வாங்க நான் அறுதையத்தவள்.. புருசனைத் திண்டவள்.. மருவாதியோட என்ர புள்ளக் குஞ்சுகளை வளக்க விடுங்க. காக்கா, நீங்க இந்த ஊருக்குப் பெரிய மனிசன்' இரக்கத்தோடு கையெடுத்துக் கும்பிடும் யொகாருவை, சலீக்கின் நிமிர்ந்து பார்த்தார்.

'இப்ப என்ன நடந்தது. நீ கடைசி வரை தனிய இரிக்கப் போறாய்... எனக்குத் தெரியும் யொகாரு. நான் பழையதை மறந்து போனன். எங்க வல்கிசு? அப்பத நான் மீன் கொண்டு வரக்குள்ள நீ இல்ல; கூப் பன் கடைக்குப் போயிருந்தியாம்.. வல்கிசு மட்டும் தான் இரிந்தாள்...'

யொகாருவின் மேல் பெரிய நச்சு மாமரம் ஒன்று சரிந்தது.

'நீங்களா மீன் கொண்டு வந்திங்க..?'

'நான் தான்' என்ற சலீக்கின் காக்காவின் பார்வை குடிசை வாசலில் படிவதைக் கண்ட யோகாரு சட்டெனத் திரும்பிப் பார்த்தாள். வல்கிசு சைகையால் ஏதோ சலீச்கினுக்குக் கூற முயல்வதைக் கண்டு துணுக்குறுகிருள்.

வல்கிசு பொய் சொன்ஞளா? இந்தச் சிறு பொட்ட ஏன் என்னட்ட பொய் சொன்ஞள்?

சலீக்கின் நம்பக்கூடியவர் அல்லர்.

யொகாருவின் தலேயே சிதறிவிடுவது போல விண்ணென்று தெறிக்கின்றது. அப்படியே அயர்ந்து போகிருள்.

சற்று நேரத்தின் பின் சலீக்கின் விடை பெற்றுச் செல்கிருர். யொகாரு விரைந்து எழுந்து குடிசைக்குள் புகுந்தாள்.

'உம்மா! என்னே அடிக்காத... சலீக்கின் காக்கா தான் வந்தார்' என்று வல்கிசு அலறுகிருள்.

## 6

நான்காம் நாள் அதிகாலே, ஹாஜியார் அபுதாலிப் யொகாருவை அவசரமாக ஆள் அனுப்பி அழைத்திருந்தார். 'கூப்பன்களேத் தரப் போகிருரோ' என்ற ஆவலில் யொகாரு விரைந்து சென்ருள்.

'வா மகள்... இப்பிடி இரு' என்று குழைவோடு அபுதாலிப் வரவேற்ருர்.

'வரச் சொன்னீங்களாமே?'

'ஓமோம் இதோ பார் மகள். காசில்லாமல் இரிக்கிறதும் கஷ்டம். காசி இரிக்கிறதும் கஷ்டம்... இவங்கள் நூறு ரூபாத்தாள் செல்லாது, புதிசா வேங்கில மாத்திக் கொள்ளுங்க என்று சட்டம் போட்டிட்டாங்க. என்ன செய்கிறது? எல்லாத் தாளையும் நானே கொண்டு போய் மாத்த முடியுமா? ஒருவர் மூன்று தாள் தான் மாத்தலாமாம்? நீ ஒரு மூன்று நோட்டு வேங்கிக்குப் போய் மாத்தி வரனும்..'

'நானு எனக்கு எங்கால காசி என்று கேட்பாங்க' என்று மறுக்கிறுள் யொகாறு.

'அப்படிக் கேட்க மாட்டாங்க. மூன்று தாள் மாத்தித் தந்தா உனக்குப் பத்து ரூபா தாறன்... ஒரு கூப்பனும் தாறன், மகள். செய்யிறியா? இதில் என்ன கஷ்டம் இரிக்கி?'

'பத்து ரூபாய், ஒரு கூப்பன்:' ஏழை மனம் பேதலித்தது. பைத்துன் கிழவியை வீட்டில் காவலிருத்திவிட்டு, யொகாறு திருகோணமலைக்குப் போனுள். பதை பதைக்கும் வெயில். மாலை நான்கு மணி வரை 'கியூ' வில் நின்று மூன்று நூறு ரூபாய் நோட்டுக்களை புதிய நோட்டுக்களாக மாற்றிக் கொண்டு போய் ஹாஜியாரிடம் கொடுத்து விட்டு வீட்டிற்குத் திரும்பினுள்.

திரும்பும் வழியில் தற்செயலாக ஹமீட்டைக் கண்டாள். அவனைக் கவனிக்காததைப் போல விலகிப் போய்விட முயன்றுள். ஆனுல், அவன் சைக்கிளை குறுக்கே விட்டு மறித்தான்.

'யொகாரு...' என்று ஹமீட் அழைத்து, 'காசி மாத்தவா போனுய்? நீ பேப்பர் பாத்தாத் தானே...?' என்கிறான்.

'ஏன்?'

'பிச்சைச் சம்பளம் எடுக்கிறவங்கள் பலர் பணக்கா ரருக்காக வங்குவலே மாத்தி தாருன்களாம். அதனுல, காசி மாத்தினவங்கள் பிச்சைச் சம்பளம் எடுக்கிறவங் களா இருந்தா அதுக்குப் பொறவு சம்பளம் கிடைக் காதாம்.... நீ அபுதாலிப் பணக்காரன்ர கதயில ஏமாந் திட்டியே?' என்று சிரிக்கிறுன் ஹமீட்.

'அல்லாஹு... அதுக்குத்தான் காசீ மாத்தக்குள்ள பர் விலாசம் எல்லாம் கேட்டு எழுதினுங்களா? நான் என்ன செய்வேன்!' என்று கலங்கினுள், யொகாரு.

'ஏமாந்திட்டனே ..'

'பிச்சைச் சம்பளம் போனுக்க உனக்கு என்ன யொகாரு... புதுச் சம்பந்தம் இரிக்கே. ஒனக்கு இந்ந ஹமீட்டைத் தான் பிடிக்காது. மீன்காறன் சலீக்கினே நல்லாப் பிடிக்கும்.'

'தூ' என்று காறி உமிழ்ந்தாள் யொகாரு: 'வீண் பழி சொல்லாதை நாக்கு அழுகிப் போகும்.'

'எனக்கா? அடி யொகாரு, ஒவ்வொரு நா இராத் திரியும் சலீக்கின் ஒன்ரை வீட்டுக்கு வந்து போறது ஊருக்குத் தெரியும்டி... அவனுக்கும் ஒரு குட்டி

போட்டுக் கொடுப்பே... முந்தநாள் ராத்திரி நான் என் கண்ணால கண்டன்... வேலிக்கடப்பைத் தாண்டி அவன் போறதை.'

'பாவி, விடுடா வழியை' என்று அலறுகிருள், யொகாரு.

'போ... நீ இப்ப போ... ஒன்னையும் அவனையும் கையும் மெய்யுமாகப் பிடிச்சு பள்ளிவாசல்ல நிப்பாட்டி ஊராக்களுக்கு முன்னால ஹத்தடி வாங்க வைக்கல்ல... நான் ஹமீட் இல்ல'

'ஒன்னால அது முடியாதுடா .. அண்டைக்கும் இண்டைக்கும் எண்டைக்கும் நான் துறைக்காற இஸ்மாயிலு பொண்டாட்டிடா, மானத்துக்காக வாழுவன் அப்படி இல்ல நச்சு மாங்காய் திண்டு சீவனை விடுவன்...'

சோர்ந்து தள்ளாடி வீட்டிற்குத் திரும்பி வந்தாள், யொகாரு. வீட்டுப் படலை அருகில் இமாம்தீன் மாஸ்ரரும் மரைக்கார் காசீமும் நிற்பது தெரிகின்றது.

## 7

மரைக்கார் காசீம் ஹாஜியார் கௌரவமான மனிதர். அவரைப்பற்றி கை மடிக்க இயலாத தூயவர். அவர் ஒரு வீட்டிற்கு வருவதென்றால் அதை விடப் பெருமை வேறில்லை.

மரைக்கார் காசீம் ஹாஜியார் உண்மையான ஒரு முஸ்லீமாக வாழ்பவர். கலிமா, தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் ஆகிய முஸ்லீம்களின் ஐந்து கடமைகளையும் உயிராக மதித்து நிறைவு செய்பவர். 'புண்

ணியமான நல்ல காரியங்களுக்கும், அல்லாஹ்வை பணிவதற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து கொள்ளுங்கள். பாபத்திற்கும், அக்கிரமத் திற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இரா தீர்கள்' என்ற அல்குர்ஆன் திருவாக்கை வாழ்க்கை யில் கைக்கொள்ளும் முஸ்லீம்.

அவரைக் கண்ணுற்ற யொகாறு ஓடிவருகிறாள். 'வாங்க வாப்பா...வாங்க... இந்த அனாதை யத்தவ ளிட்ட...'

'எல்லாரும் அனாதைதான் மகள்... வா உள்ள போவம்... உன்னிடம் ஒரு முக்கிய விஷயம் கதைக்க வேணும்.'

ஓலைப்பாயைத் திண்ணையில் விரித்து மரைக்காரை இருக்கச் செய்துவிட்டு அவருக்கு முன்னே யொகாறு நிற்கிறாள். சற்று தூரத்தில் முற்றத்துத் தென்னையை ஒரு கையால் பற்றியவாறு இமாம்தீன் நிற்கிறான்.

'இரி மகள் '

'சொல்லுங்க, வாப்பா...'

'சுற்றிப் பேச எனக்கு வராது மகள். இந்த ஊரைப் பார்க்கேக்க எனக்கு கவலையாக இரிக்கி. தொழிலில்ல, படிப்பில்ல, கலியாணம் கட்டிக்கிறாங் கள்... ரெண்டு கிழமையில காதிக் கோட்டில் பிரிஞ்சு கொள்ளுறாங்க. இளம் சந்ததி சோம்பிப் போச்சுது. கூப்பனை வித்துச் சாப்பிடுறாங்கள்... கள்ள மார்க்கட் கூடிப் போய்த்துது. இதெல்லாம் எங்க போய் முடியப்

போகுதோ? நம்மட சமூகத்தில பெரிய மாற்றம் வர வேணும். போகட்டும் மகள்... நான் வந்ததைக் கூறு கிறன். உன் மகள் வல்கிசுவை இமாம்தீன் தம்பி நிக்காஹ் செய்ய விரும்புகிருன்.'

'வாப்பா?'

'இந்தக் கிழவன் ஒருபோதும் பிழையான விஷயத் தில தலையிட மாட்டான், மகள்! உம்மா, வாப்பா இல்லாத பொடியன்... ஒழுக்கமானவன். நீ ஓமென்ருல் எல்லாம் செரியா நடக்கும்.'

வல்கிசுக்கு இவ்வளவு பெரிய அதிர்ஷ்டமா?

'இப்ப என்னட்ட காசி இல்ல வாப்பா...'

'அது எனக்குத் தெரியாதா, மகள்? உனக்குச் சம்மதம் தானே...?'

'நீங்கதான் ஆண்டவன்' என்று விம்மினுள் யோகாரு.

'அல்லாஹு' நித்தம் சோதிக்க மாட்டான். மகள் ஒன்ரை நல்ல மனசுக்கு ஒனக்கு ஒரு கொறையும் வாராது.'

எல்லாக் கவலைகளையும் மறந்து யோகாரு சிரிக் கிருள்.

# 8

அன்று இரவு நெடு நேரம் தூக்கம் வராமல் யொகாரு தவித்தாள். அவளுக்குப் பக்கத்தில் குழந்தைகள் தூங்கின. சற்று விலகி வாசலோடு வல்கிசு படுத்திருந்தாள்.

'யொகாரு, என் ஆசை யொகாரு' என்ற இனிய வார்த்தைகள் அடிக்கடி அவள் காதுகளில் ரீங்காரமிடுகின்றன: 'உன் மேல எனக்கு இரிக்கிற ஆசை ஒருக்காலும் போகாதடி...'

அப்படியே அயர்ந்து தூங்கிப் போனுள் யொகாரு. இனிய கனவுகள்... இஸ்மாயில் அவளை அணைத்து முத்தமிடுகிறுன். செவலை மாடுகள் பூட்டிய வண்டிலில் அவர்கள் இருக்கிறுர்கள். வலக்கன் செவலைக்கு இருந்தாற் போல வெறி. புளுதி கிளம்புகின்றது... வண்டில் அசுர வேகத்தில் பாய்கிறது. இதோ... இதோ

'ஐயோ ' என்று அலறியபடி திடுக்கிட்டு விழிக்கிறுள் யொகாரு. வெளியே ஏதோ இரைச்சல் கேட்கின்றது. யாரோ அவளை அழைத்தது போன்ற பிரமை.

பிரமையா? இதென்ன குடிசைக் கதவு திறந்திருக்கிறதே? வல்கிசு எங்கே?

பதறி எழுந்து வெளியே ஓடி வருகிறுள்.

முற்றத்தில் பலர் நிற்பது தெரிகின்றது. 'லாந்தர்' வெளிச்சத்தை ஒருவன் தூக்கிப் பிடிக்கிறுன். யொகாருவின் முகத்தில் ஒளி பாய்கின்றது.

சலீக்கினை இருவர் பிடித்திருக்கின்றனர். சலீக்கின் திமிற முயல்கிறான்.

நடந்து போனதை உணர யொகாறுவிற்கு வெகு நேரமாகவில்லை. ஹமீட் கூறியபடி செய்து விட்டான். அப்படியாயின் சலீக்கின் இந்த நேரத்தில் ஏன் இங்கு வந்தான்?

யொகாறு விரைந்து குடிசைக்குள் ஓடுகிறாள். வல்கிசைக் காணவில்லை. வல்கிசு எங்கோ வளவிற்குள் நிற்கிறாள்.

'அடி பாவிப் பெண்ணே! என் தலையில மண்ணைப் போட்டு விட்டாயே... இமாம்தீனுக்கு நான் என்ன பதிலைக் கூறுவேன்?'

வெளியே இருந்து கனத்த குரல் ஒன்று எழுகின்றது

'யொகாறு, வெளியே வா..' இக்குரல் மரைக்காருடையது தான்.

'வாடி... ஒழுக்கம் கெட்ட நாயே'— இக்குரல் ஹமீட்.

குடிசைச் செத்தை சரசரக்கின்றது. குடிசைக்குப் பின்னால் யாரோ நிற்கின்றார்கள்.

'உம்மா என்னை மன்னிச்சுக்க. என்னைக் காட்டிக் கொடுத்திடாத'— வல்கிசுதான்.

'ஆண்டவனே' என்று வாய்விட்டு அலறுகிறாள், யொகாறு.

வெளியே கூட்டம் கூடுகின்றது.

'யொகாரு... வாடி நாயே'

அவள் எச்சிலை மென்று விழுங்கினுள்.

ஒரு முடிவுடன் குடிசையை விட்டு வெளியே வருகிருள்.

'தூ...' என்று காறி உமிழ்கிருன் ஹமீட்.

சலீக்கின் தலைகுனிந்து நிற்கிருன். அவளை ஒரு முறை நிமிர்ந்து பார்க்கின்ருன். அவளது நீர் படர்ந்த விழிகள் அவனிடம் எதையோ யாசித்தன.

நாளை —

பள்ளிவாசல் முன்றலில் பலரின் முன்னிலையில். அவள் செய்யாத குற்றத்திற்கும், சலீக்கின் செய்த குற்றத்திற்கும் ஹத்தடி நடக்கப் போகின்றது.

யொகாருவின் மேல் விழுகின்ற ஒவ்வொரு மட்டை அடியும் —

'யொகாரு... என் ஆசை யொகாரு...'

(வீரகேசரி — 1973)

# அக்கினிக் குஞ்சு

## 1

கோண்டலடிப் பிள்ளையார் கோவில் பக்கமாக நாய்கள் குரைத்துச் சீறின.

இரவின் அமைதித் திரையைக் கீறிக் கிழிப்பனபோல அவை 'அவக் அவக்' கெனக் குரைத்து ஓலமிட்டன.

வீட்டின் பின்புற விறுந்தையில் படுத்திருந்த செல்வம் திடுக்கிட்டு எழுந்தான். பிரகாசமான ஒளி விளக்குகள் பிள்ளையார் கோவில் பக்கமாக ஒரு கணம் ஒளிர்ந்து அணைந்ததை அவன் கண்டான்.

அவனுக்குப் புரிந்துவிட்டது. விருட்டென்று எழுந்தான். தலையணைக்குக் கீழ் கை வைத்து ரிவோல்வரை எடுத்தபோது, விறுந்தைப் பக்கமான யன்னல் மெதுவாகத் திறந்தது. இருளில் அறைக்குள் ஒரு உருவத்தின் நிழலாட்டம்.

''தம்பி... அவங்கள் வாறுங்கள் போல ..'' குரலில் இழைந்த துயரத்தின் அளவு கொஞ்சமல்ல. அறைக்குள் விம்மல் வெடித்தது.

"அம்மா... நான் வாறன்... அழாதையனை.."

"எப்படா இனி உன்னைக் காணப்போறன்..."

வெகு அருகில் கனத்த பூட்ஸ்களின் சத்தம் மெதுவாகக் கேட்டது. அவற்றின் ஒலியைக் கிரகிக்கும் தன்மையை அவன் பெற்றிருந்தான். கடந்த ஆறு மாதங்களாக அவனுக்குப் பரிச்சயப்பட்ட ஒலிகள். அவர்கள் இரவிரவாக அவனைத்தேடித் துரத்துவதும் அவன் தப்பி மறைவதும் அடிக்கடி நிகழ்ந்து வரும் சம்பவங்களாகி விட்டன.

திறந்த யன்னலூடாகக் கரத்தை நுழைத்துத் தாயின் கன்னத்தை ஆதரவுடன் தடவி விட்டான். அவன் கரத்தில் அத் தாய் முத்தமிட்டு விம்மினாள்.

"ஓடிவிடு தம்பி..."

அவன் வலக்கரத்தில் அவன் தாயின் கண்ணீர் சில்லிட்டது. அவன் விழிகளிலும் கண்ணீர் திரையிட்டது. ஆயத்தமாக வைத்திருந்த ஒலைப்பை ஒன்றினுள் றிவோல்வரையும் சில துணிகளையும் திணித்துக் கொண்டு பின்பக்கமாகச் சத்தமின்றி விரைந்தான். பின்பக்க வேலியால் ஏறிக் குதித்து இருளில் மறைந்தான்.

அவன் மறைந்த மறுகணம் சொல்லி வைத்தாற் போல இராணுவத்தினர் அவ்வளவிற்குள் புகுந்தனர். சிலர் வேலியால் ஏறித்தாவி வந்தனர். சிலர் கறையான் தின்று கலகலத்திருந்த வேலியைப் பிடுங்கித்தள்ளிக் கொண்டு பிரவேசித்தனர். அந்த வீட்டைச் சுற்றி இராணுவ வீரர்கள் துப்பாக்கிகளை நீட்டிக் கொண்டு யுத்தத்திற்குத் தயாரானவர்கள் போல நின்றனர். ஆமட் காரிலிருந்து வயர் இணைப்பின் மூலம் திடீரென ஒளி வீட்

டின் மீது பாய்ச்சப்பட்டது. திறந்திருந்த யன்னல்கள், காற்று வருவதற்காக விடப்பட்டிருந்த ஓட்டைக்கறகள் என்பன ஊடாக மிசின்கன்களால் வீட்டினுள் குறிவைக் கப்பட்டன.

வீட்டின் கதவை வந்த இராணுவ வீரர்களில் தலைவன் போலக் காணப்பட்டவன் படபடவெனத் தட்டினான். அவன் பின்னால் மூவர் மிசின்கன்களை நீட்டிக்கொண்டு நின்றிருந்தனர்.

இராசம்மா மெதுவாக வந்து கதவைத் திறந்தாள். அவள் மார்பில் மெசின்கன்னைப் பதித்தபடி அவர்கள் உள்ளே நுழைந்தனர்.

''செல்வம் எங்க...? கொகயத செல்வம்? ''

''அவன் இங்க இல்லை.''

இராசம்மாவிற்கும் பழக்கப்பட்டுவிட்ட துயர் நிகழ்ச்சி. அவள் குரலில் வெறுப்பும் துக்கமும் பீறிட்டன.

''பொறுகியண்ட எப்பா... பொய் சொல்லாதே... அவன் இங்க வந்திருந்தானும் எங்களுக்கு மெசேச் வந் தது எங்க அவன...?''

''அவன் இங்க வாறதில்லை... அவன் எங்கயெண்டும் எனக்குத் தெரியாது... ஏன் இப்படிக் கரைச்சல் தாறியள்?... எங்களை நிம்மதியாக இருக்க விடுங்களேன்...''

அவன் ஏளனமாகச் சிரித்தான்.

''பொலிஸ்காரரைச் சுடுகிறது... ஆமியைச் சுடுகி றது பாங்குகளில் கொள்ளையடிக்கிறது?.. நாங்களா கரைச்சல் தாறது?''

இராசம்மாவின் வீட்டு அறைகளுக்குள் இராணுவத்தினர் புகுந்து தேடினார்கள். சாமி அறைக்குள் படுத்திருந்த இராசம்மாவின் இரு பெண்பிள்ளைகளும் பயத்துடன் ஓடி வந்து தாயிடம் ஒட்டிக்கொண்டார்கள். இருவரும் வயது வந்த பெண்கள். செல்வத்தின் பின் பிறந்தவர்கள். தகப்பனில்லாத பிள்ளைகள்.

''கொந்த வடு ..'' என்ருன் ஒரு இராணுவ வீரன் மெதுவாக.

வீடு முழுவதும் அவர்கள் தேடினர். அலுமாரிகளைக் குடைந்தனர். பெட்டிகளைத் திறந்து பார்த்தனர். வீட்டுச் சீற்றுகளை உடைத்துப் பார்த்தனர்.

செல்வம் அகப்படவில்லை. இராணுவ கப்ரின் கோபத்துடன் காணப்பட்டான். நடுச்சாமம் கடந்த வேளையில் நிம்மதியான தூக்கத்தைவிட்டு ஒரு புலியைத் தேடி அலைவது அவனுக்கு வெறுப்பைத் தேடித் தந்தது. தேடி வந்த புலி கிடைக்காது போனதும் அவன் ஆத்திரத்துக்கு வடிகால் தேவைப்பட்டது. எதிரில் இருந்தவர்கள் மூவரும் பெண்கள் ஆதலால் அவர்களிடம் அவனுல் தன் கோபத்தைக் காட்ட முடியவில்லை. கோபத்துடன் ஹோலில் இருந்த சோக்கேசின் கண்ணுடிகளை பூட்ஸ் காலினுல் எட்டி உதைத்தான். கண்ணுடிகள் பளார் என நொருங்கிச் சிதறின. கப்ரின் தொடக்கி வைத்ததும் அவனுடன் கூட நின்றிருந்த வீரர்கள் அங்கிருந்த கதிரை, அலுமாரி என்பனவற்றை அடித்து நொருக்கினர்.

''அவனைப் பிடியாமல் விடமாட்டம் ''

அவர்கள் வெளியில் வந்தனர். அவ்வேளை ஒரு இராணுவ வீரன் கப்ரினிடம் ஏதோ கூறினுன். கப்ரின் அவனுடன் பின் பக்கமாக விரைந்தான். பின்பக்க விருந்தை

யில் காணப்பட்ட வாங்கில் பெற்சீற்றும் ஒரு தலையணை யும் கிடந்தன. அவன் வீரர்களுக்குப் பல கட்டளைகளைப் பிறப்பித்தான். இராணுவ வீரர்கள் பின்பக்க வேலி யால் தாவி ஏறிப் பாய்ந்தனர்.

கப்ரின் இராசம்மாவிடம் மீண்டும் வந்தான்.

"நீ பொய் சொல்வது... செல்வம் பின்னால படுத் திருந்திருக்கான்." என்றபடி துப்பாக்கியை ஓங்கி இராசம்மாவை அடிக்கப்போனான்.

இராசம்மாவின் இரு பெண்களும் வீரிட்டுக் கத்தி னார்கள். ஓங்கிய துப்பாக்கியை அவன் தாழ்த்திக் கொண்டான்.

"உங்க ஒருத்தரையும் விடமாட்டம்... அவன் பிடி படாவிடில் உங்க ஒருத்தரையும் விடமாட்டம்..."

அவர்கள் வெளியேறினர்.

அவர்கள் வெளியேறிச் சென்ற பின்னர். வீட்டு வளவு வேலி விளாசி எரிந்தது: அயலவர்கள் கூடி அணைப்பதற்கு முன்பே வேலி முற்றாக வெந்து தணிந்தது.

"உங்களால நாங்கள் அயலுக்க இருக்க முடி யாது.." என்று தண்ணீர் ஊற்றித் தீயை அணைக்கும் போது பக்கத்து வீட்டுப் பொன்னப்பர் முணுமுணுத் தார்.

## 2

அதிகாலை 2 மணி. கனத்த இருள்.

செல்வத்தின் வீட்டு வாசலில் பொலீஸ் ஜீப் பொன்று மெதுவாக வந்து நின்றது. ஐந்தாறு பொலீசார் இறங்கினர். வீட்டுக் கதவைத் தட்டிக் கூப்பிட்டனர்.

"வீட்டுக்காரர்...! வீட்டுக்காரர் . ;"

அந்த வீட்டில் ஒரேயொரு ஆண்பிள்ளை செல்வம் தான். மற்ற மூவரும் பெண்கள். செல்வத்தின் அப்பா மலாயன் பென்சனியர். காலமாகிவிட்டார். கிராமத்தில் காணி பூமிகள் இருந்தன. செல்வம் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். அந்த ஆண்டு அவன் சோதனை எடுக்கவிருந்தான். ஒரு எஞ்சினியராக வரவேண்டும் என்பது அவன் கனவாகவிருந்தது.

வீட்டு வாசலில் ஜிப் வந்து நின்ற சத்தமும் அவர்களைக் கூப்பிடும் சத்தமும் இராசம்மாவிற்குக் கேட்டது அவள் எழுந்து செல்வத்தை எழுப்பி விட்டாள். அவன் வீட்டு லைற்றுகளைப் போட்டான். கதவைத் திறந்து விட்டான்.

ஐந்து பொலீசார் உள்ளே வந்தனர். அந்த வீட்டிற்குப் பொலீசார் வந்த முதல் நாள் அதுவே. இராசம்மாவிற்குத் திக்கென்றது. செல்வத்தின் தங்கைகள் பயந்து நடுங்கினர்.

"நீதானா செல்வம்!..." என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"ஓம் சேர்..." என்றான் பயந்தபடி செல்வம்.

"இந்தப் படத்தில் இருப்பது நீயா?..." இன்ஸ்பெக்டர் நீட்டிய படத்தை அவன் பார்த்தான். அது ஒரு குறூப் போட்டோ. அவனது நண்பர்கள் நால்வர் அவனுடன் இருந்தனர். நரேந்திரன், சின்னராசா, சிவகாந்தன், மதிவாணன், அவன் ஆகியோர் அப் படத்தில் இருந்தனர்.

"ஓம் சேர் "

"அப்ப எங்களுடன் வா..."

செல்வம் விக்கித்துப் போய் நின்றான். அவன் உடல் பயத்தால் நடுங்கியது. தாயைப் பயத்துடன் பார்த்தான்.

"அவனை ஏன் கூப்பிடுகிறியள் சேர்..." என்று இராசம்மா கேட்டாள்.

"ஒன்றுக்குமில்லை .. நீங்க பயப்படாதையுங்கோ கொண்டலடிப் பிள்ளையார் கோயில் மடப்பள்ளியில் கைக்குண்டுகள் செய்த விசயமாக விசாரிப்பதற்குத்தான் .. விசாரித்துவிட்டு அனுப்பி வைப்பம் " என்று மிகவும் அமைதியாக அந்த இன்ஸ்பெக்டர் கூறினார்.

"எனக்குப் பயமாக இருக்குது அம்மா..." என்று செல்வம் கலங்கினான்.

"நானும் வரட்டுமா சேர்? " என்று இராசம்மா கேட்டாள்.

"வேண்டாம்... விசாரித்துவிட்டு உடனே விட்டிடுறம்... சரி வா... செல்வம்..." அவன் தோளில் கை வைத்து இன்ஸ்பெக்டர் அழைத்தார். அவன் அவருடன் பயத்துடன் நடந்தான். அவர்கள் ஜீப்பை நெருங்கினர்.

"ஏறடா ஜீப்பில்..." என்று அந்த இன்ஸ்பெக்டர் உறுமினர். வீட்டிற்குள் அவனை அமைதியாக விசாரித்த அவர் வீட்டிற்கு வெளியில் உறுமினர். செல்வத்தின் கால்கள் படபடத்தன. பயத்துடன் ஜீப்பில் ஏறிக் கொண்டான்.

ஜீப் புறப்பட்டது. ஜீப்பில் வேறும் பலர் இருந்தனர். அவனது நண்பர்கள் நால்வர் அதில் இருந்தனர். அவன் வியப்புடனும் பயத்துடனும் அவர்களைப் பார்த்தான்.

நரேந்திரன் தலையைக் குனிந்தபடி அமர்ந்திருந்தான். அரையில் சாறம் மட்டும் தரித்திருந்தான். அவன் முகம் பயங்கரமாக உப்பி வீங்கியிருந்தது. கண்டல் காயங்கள் காணப்பட்டன. சின்னராசாவின் நெற்றி வெடித்திருந்தது. சிவகாந்தனின் உடலில் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. சிகரெட்டினுல் சுட்டிருந்தார்கள். மதிவாணன் பயத்துடன் மூலையில் முடங்கிக் கிடந்தான். செல்வத்திற்கு வயிற்றைக் கலக்கியது. பயத்தில் நெஞ்சு வெடித்துவிடும் போலத் துடித்தது.

"தள்ளி இரடா..." என்று கூறியபடி ஒரு பொலிஸ்காரன் செல்வத்தின் பிடரியில் ஓங்கி அறைந்தான். அந்த அறையின் வேகத்தைத் தாங்க முடியாது செல்வம் முன்னுல் சீற்றில் அமர்ந்திருந்த சின்னராசா மீது விழுந்தான்.

செல்வம் கோபத்துடன் தன்னை அடித்த பொலிஸ்காரனைப் பார்த்தான்.

" ஏன் என்னை அடிக்கிறியள்... நான் என்ன குற்றம் செய்தன்...? " என்று குமுறலுடன் கேட்டான்.

" எளிய வடுவாக்கள். கைக்குண்டு செய்யலாம் கைக்குண்டு வீசலாம்... இப்ப என்ன குற்றம் எண்டு கேக்கிறியள்... " என்றபடி செல்வத்தைப் பற்றி இழுத்து ஜீப்பின் வக்கினுள் அமுக்கிவிட்டான். தன் சப்பாத்துக் கால்களை அவன் மீது தூக்கிப் போட்டுக்கொண்டான்.

செல்வம் வக்கிற்குள் கிடந்து குமுறிக் குமுறி அழுதான்.

"எனக்கு ஒன்றும் தெரியாது. ஒன்றும் தெரியாது..."

பொலிஸ் நிலையத்தில் அவனையும் ஏனையோரையும் விசாரித்தனர். உதவிப் பொலிஸ் அதிபர் ஒருவரின் ஜீப்பிற்குக் கைக்குண்டு வீசியது பற்றி விசாரித்தனர். ஐயனார் கோயிலடியில் மாஸ்ரரின் வீட்டிற்குக் கைக்குண்டு வீசியது பற்றி விசாரித்தனர். சுண்டிக்குளியில் அரசியல் பிரமுகர் ஒருவரின் வீட்டிற்குக் கைக்குண்டு வீசியது பற்றியும் விசாரித்தனர். கடைசியாகக் கொண்டலடிப் பிள்ளையார் கோவில் மடப்பள்ளியில் பலர் கூடி கைக்குண்டு செய்ததைப்பற்றியும் பொலிஸ் வந்ததும் எல்லாரும் தப்பி ஓடியது பற்றியும் விசாரித்தனர்.

" நீயும் அவர்களில் ஒருத்தன் தானே?..." என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

" இல்லை சேர்... எனக்கு இது ஒன்றும் தெரியாது..."

" நரேந்திரன் உன்ர சிநேகிதன் தானே?..."

"சிநேகிதமாக இருந்தவர்..."

"நரேந்திரன் கைக்குண்டு செய்ததாக ஒப்புக் கொண்டிருக்கிருன்... நீங்கள் எல்லாரும் அவனது நண் பர்கள்... ஒன்ருகப் படம் எடுத்திருக்கிறியள்... அப்ப நீங்கள் ஐந்து பேரும் தான் கொண்டலடிப் பிள்ளையார் கோவில் மடப்பள்ளியில் கூடிச் சதிசெய்து கைக்குண்டு தயாரித்திருக்கிறியள்..."

குற்றம் செய்வதற்கு முன் குற்றம் செய்பவர்கள் எல்லாரும் ஒன்ருகக்கூடி ஒரு குறூப் போட்டோ எடுத்து வைத்துவிட்டுத்தான் குற்றம் செய்வார்கள் என அந்த இன்ஸ்பெக்டர் நம்பிய தத்துவத்தைச் செல்வம் எண்ணி அந்த நேரத்திலும் தன்னுள் சிரித்துக் கொண்டான், கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரம் சித்தியடைந்த வேளையில் ஒன்ருகப் படித்த ஐவரும் ஸ்ரூடியோவிற்குச் சென்று ஒரு படம் எடுத்துக் கொண்டது உண்மை. அதற்குப் பிறகு அவர்கள் திக்கிற்கு ஒன்ருகப் பிரிந்து விட்டார்கள். இன்று பொலீஸ் நிலையத்தில் தான் ஐவரும் ஒன்ருகச் சந்திக்கிருர்கள்.

அவர்களுக்கு நடந்த சித்திரவதைகள்?... அடிகள், உதைகள், சிகரட் சூடுகள் எஸ்லோன் பைப்பினுல் நடந்த ஊமையடிகள் மிளகாய்த்தூள் எரிவுகள்... ஊசிக் குத்தல்கள்... வௌவால் தொங்கல்கள்... இப்படிக் குற்றம் அற்ற தன்னை அவர்கள் ஏன் தண்டித்தார்கள்?

அவன் விசாரணையின் பேரால் மூன்று மாதங்கள் றிமாண்டில் இருந்தான். அவனுடன் மற்ற நால்வரும் இருந்தார்கள்.

" நான் உன்னுடன் கைக்குண்டு செய்ய வந்தேனு? ஏன் என்னைக் காட்டிக் கொடுத்தாய், நரேன்? ..." என்று ஒரு நாள் செல்வம் நரேந்திரனைக் கேட்டான்.

" நான் கைக்குண்டு செய்தது மெய்... என்னுடன் வேறு சிலரும் சேர்ந்து கொண்டது மெய் — அவர்களை நான் காட்டிக் கொடுக்க மாட்டன்..." என்ருன் நரேந்திரன்.

" அப்ப ஏன்ரா எங்களை அநியாயமாகச் சொன்னுய்...? " என்றபடி சின்னராசா அவன் மீது பாய்ந்தான்.

" பொறு சின்னராசா... நான் உங்கள் ஒருத்தரையும் சொல்லவில்லை... என்ர வீட்டில அகப்பட்ட அந்தப் படத்தை வைத்துக்கொண்டுதான் அந்த இன்ஸ்பெக்டர் உங்களைக் கைது செய்தான்... அவ்வளவு தான் — அவனுக்கு யாரையாவது அரஸ்ட் பண்ணியாகணும்... அது ஆராக இருந்தாலும் பரவாயில்லை... குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள் என்று மேலிடத்திற்கு றிப்போட் போனுல் அவனுக்குப் போதும்..." என்றபடி நரேந்திரன் அவர்களை ஊன்றிப் பார்த்தான்: " எங்கள் போராட்டத்தில் அப்பாவிகள் தண்டிக்கப்படுவது தவிர்க்க முடியாததுதான் "

" நீயும் உங்கட போராட்டமும்... நிம்மதியாக வாழ்ந்த எங்களை அநியாயமாக இதற்குள் சிக்கவைத்து விட்டாய்... பாவி... நீ உன்னுடன் யார் யார் கைக்குண்டு செய்தார்கள் என்று சொல்லியிருந்தால் நாங்கள் எப்பவோ விடுதலையாகியிருப்பம்... இப்படி சித்திரவதைப்பட்டிருக்கத் தேவையில்லை .." என்ருன் மதிவாணன், கோபத்துடன்.

நரேந்திரன் சிரித்தான்.

"அப்பாவிகள் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதற்காக உண்மையான போராளிகளைக் காட்டிக் கொடுக்க முடியாது, மதி... ஒவ்வொரு தமிழ் மகனும் ஏதோ ஒரு விதத்தில் பாதுகாப்புப் படையினரால் பாதிக்கப் படவேண்டும்... அப்போது தான் அவர்கள் ஒன்று சேர்வார்கள். பொலிசார் குற்றவாளிகளைத் தண்டிக்கத்தான் இருக்கிறார்கள். ஆனால் நடப்பது என்ன தெரியுமா?... அவர்கள் குற்றவாளிகளை உருவாக்குகிறார்கள்..."

அவன் சொன்னதன் அர்த்தம் நீண்ட காலத்திற்குப் பின்னர் தான் செல்வத்திற்குப் புரிந்தது.

## 3

மிளகாய்க் கன்றுகளுக்கு நீர்ப்பாய்ச்சிக் கொண்டிருந்த சின்னராசா, மண்வெட்டியை ஒதுக்காக வைத்துவிட்டு நிமிர்ந்து பார்த்தபோது, கடப்படியில் செல்வம் தயங்கி நிற்பதைக் கண்டான். முதலில் செல்வத்தை அவனால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அடையாளம் கண்டதும் வாய்க்காலூடாக அவனை நோக்கி விரைந்து வந்தான்.

காய்ந்து கறுத்து வாடியிருந்தான் செல்வம்.

"உள்ளுக்கு வா செல்வம்"

செல்வம் கடப்பைக் கடந்து உள்ளே வந்தான். லோங்சும் சேர்ட்டும் அழுக்கேறியிருந்தன. முகத்தில் சிறு தாடி வளர்ந்திருந்தது. கையிலிருந்த பையை தென்னை மரம் ஒன்றின் அருகில் வைத்துவிட்டு

கிணற்றடியை நோக்கி நடந்தான். வாட்டர் பம் நீரிறைத்துக் கொண்டிருந்தது. அள்ளி நீரைக் குடித்தான். முகத்தையும் தலையையும் நீரால் கழுவிக் கொண்டான். திரும்பி வந்தான்.

" தனியத்தான் இருக்கிறுயா சின்னராசா ..."

" இந்தக் காட்டுக்குள்ள கூட யார் வந்திருப்பார்கள்... தனியத்தான் இருக்கிறன்... நிம்மதியாக மிளகாய்த் தோட்டம் செய்து கொண்டிருக்கிறன்... ஏதோ மாதா மாதம் வீட்டிற்கும் அனுப்பிக் கொண்டு நானும் தோட்டமுமாகக் கிடக்கிறன், செல்வம்.. " என்று கூறிச் சின்னராசா சிரித்தான்:

" விஸ்வமடு உனக்குக் காடே? ... இப்ப எவ்வளவு முன்னேறிவிட்டது?... பசிக்குதடா... ஏதாவது வைச்சிருக்கிறியா?... "

சின்னராசா, செல்வத்தை வியப்புடன் பார்த்தான்.

" சாப்பிட்டு ஒரு நாளாகுது " என்ருன் செல்வம்.

சின்னராசா அவனை ஆதரவுடன் பார்த்தான்.

" ஒன்றும் இல்லையடா... வா, தேத்தண்ணி வைச்சுத் தாறன்... அரை மணி நேரம் பொறுத்துக்கொள்... சோறு காய்ச்சித் தாறன்... அருமையாகச் சமைப்பன் செல்வம். வா... "

அந்தச் சிறிய குடிசைக்குள் அவர்கள் நுழைந்தார்கள். அந்த மதிய வெயிலுக்கு அத்தென்னங் கீற்றுக் குடிசை மிக இதமாக இருந்தது. சாணியால் மெழுகப்பட்டு வெகு துப்பரவாக இருந்தது. துறவியின் ஆச்சிரமாகச் செல்வத்திற்குப் பட்டது.

" என்னை அநியாயமாகப் பொலிசார் கைதுசெய்து சித்திரவதை செய்ததன் பின்னர் எனக்கு யாழ்ப் பாணமே பிடிக்கவில்லை. இந்த அமைதியான இடத் திற்கு ஓடி வந்துவிட்டேன்... நிம்மதியாய் இப்ப இருக் கிறன் எப்பவாவது அம்மா வருவா... தம்பிமார் வருவினம்... இரண்டொரு நாள் நிப்பினம்... அவர் களுக்கு ஒத்துக்கொள்ளாது ... போய் விடுவினம் .."

சின்னராசா அடுப்பை மூட்டினான். கேத்திலை அடுப் பில் வைத்தான். செல்வம் அவன் அருகில் சுவரோடு சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

" உன் அமைதியைக் குலைக்க நான் வந்திருக்கிறன்' சின்னராசா..." என்றான் செல்வம் அமைதியாக. அவற்றைக் கூறிவிட்டு அவன் தலையைக் குனிந்து கொண்டான்.

" எனக்குத் தெரியும் செல்வம் ."

" என்ன தெரியும்? ..."

" உன்னைப் பொலிசார் தேடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நீ அவர்களின் பிடியில் அகப் படாது தப்பி ஓடி வருவதும் தெரியும் .. உன் வீட்டை இராணுவத்தினர் அடித்து உடைத்து, வேலிக்கு நெருப்பும் வைத்ததும் தெரியும் "

செல்வம் துடித்துப் பதைத்து எழுந்தான்.

" வேலிக்கு நெருப்பு வைத்தார்களா? "

" ஓம்... பேப்பரில் வந்தது..."

செல்வம் நீண்ட நேரம் அப்படியே கல்லாக அமர்ந்திருந்தான். அவன் விழிகள் எங்கோ ஆழ்கனவில் நிலைத்து நின்றன, சின்னராசா தேநீரை அவன் முன் வைத்தான்.

"குடி செல்வம்..." என்று அவனைப் பற்றி உலுக்கினான்.

செல்வம் கிளாசை எடுத்துக் கொண்டான்.

"பார்த்தாயா, நாங்கள் எவ்வளவு அநியாயமாகப் பாதிக்கப்படுகிறம் என்று.."

சின்னராசா எதுவும் கூறவில்லை. அடுப்பில் உலை வைத்தான். அரிசியை எடுத்து கற்களைக் களையத் தொடங்கினான்.

"உன்னை ஏன் பொலிசார் தேடுகிறார்கள்? .. பொலிசாரைச் சுட்டுக் கொன்றதில நீயும் ஒருவனா? வங்கிகளைக் கொள்ளையிட நீயும் சென்றாயா? .."

"இல்லை.." என்றான் செல்வம்: "நான் எவரையும் கொல்லவில்லை.. எதனையும் கொள்ளையடிக்கவுமில்லை."

"அப்ப ஏன் பொலிசார் தேடுகினம்...?"

"பொலிசார் தேடுவதற்குக் காரணம் இருக்க முடியுமா, சின்னராசா?... அன்று முதன் முதல் என்னையும் உன்னையும் மதியையும் காந்தனையும் எதற்காகப் பொலிசார் கைது செய்தார்கள்? எதற்காக எங்களைச் சித்திரவதை செய்தார்கள்?... காரணம் இருந்ததா?..."

"சந்தேகத்தின் பேரில் கைது செய்தார்கள்—"

"சரி கைது செய்தார்கள்... விசாரித்துவிட்டு விட்டிருக்கலாமல்லவா? "

"விசாரித்துவிட்டு விட்டார்கள் தானே?..."

செல்வம் பெரிதாகச் சிரித்தான்,

"விசாரித்துவிட்டு கோர்ட்டில் விட்டார்கள்... கோர்ட்டில் எங்களைக் குற்றமற்றவர்களாகக் கண்டு விடுதலை செய்தார்கள்... ஆனால்... எங்களுக்கு அவர்கள் செய்த சித்திரவதைகள்... என் நகக் கண்களில் ஊசிகளை ஏற்றியதை எப்படி நான் மறப்பன்? .. என்னைத் தலைகீழாகத் தொங்கவிட்டு கண்களில் மிளகாய்த் தூள் தூவியதை எப்படி மறப்பன்? என்னால் முடியவில்லை. சப்பாத்துக் கால்களால் எதுவுமறியாத என்னை உதைத்து ஜீப்பின் வக்கிற்குள் அமுக்கியதை எப்படி நான் மறந்துவிட முடியும்? சின்னராசா. நீ அவற்றையெல்லாம் வெகு இலகுவில் மறந்து விட்டாய்...!"

உணர்ச்சியோடு செல்வம் அள்ளிக் கொட்டினான்.

"வேறு வழி...?"

உலை கொதிக்கத் தொடங்கியது. சின்னராசா அரிசியைக் கழுவி உலையில் இட்டான்.

"சாப்பிட்டுவிட்டு நான் எங்காவது போய் விடுகிறன் சின்னராசா "

சின்னராசா அவனைக் கோபத்துடன் திரும்பிப் பார்த்தான்.

"விசரன் மாதிரிக் கதைக்காதை... நீ இங்க எத்தனை நாள் வேண்டுமானாலும் இரு... நான் உனக்குச் சாப்பாடு போடுறன்... எவரும் உன்னைத்தேடி இங்க

வரமாட்டினம்.. ஆராவது விசாரித்தால் நீ கூலி வேலைக்கு வந்ததாகச் சொல்லுறன். அப்படிப் பொலிசார் வந்தாலும் தப்பி ஓட பின்னால் காடிருக்கிறது... கொஞ்ச நாள் என்னுடன் இரு... ஒரு நண்பனுக்கு இதுகூடவா நான் செய்யக்கூடாது?...''

செல்வம் நன்றியுடன் அவனைப் பார்த்தான்,

# 4

குடிசையின் பின்னால் மந்துகள் மண்டிக் கிடந்தன. பற்றைகளும் முட்புதர்களும் அடர்ந்து கிடந்தன. அவற்றை இருவரும் வெட்டிப் புரட்டினார்கள்.

''உன்னைப் பார்க்க எனக்குப் பொறுமையாக இருக்குது, சின்னராசா.'' என்றான் செல்வம்: ''உன் வாழ்வின் அமைதி நகரங்களில் வராது... கிடையாது...''

''நீ நினைப்பது மாதிரி இது இலகுவான தொழிலல்ல செல்வம்... கமம் சூதாட்டம் மாதிரி.. பணக்காரர்களுக்குரிய தொழிலாகத்தான் கமம் இன்றைக்கு இருக்கிறது. ஏராளமான முதலீடும் உழைப்பும் இதற்குத் தேவை. கிடைக்கின்ற வருவாய் சொற்பமாகவே இருக்கிறது... மிளகாயால் இப்பகுதி மக்கள் அதிக லாபம் அடைந்த காலம் இருந்தது. இன்று மிளகாய் தங்கு தடையின்றி இறக்குமதியாவதால் உற்பத்திச் செலவே கிடைப்பது கஷ்டமாக உள்ளது... அது போகட்டும். உன்னைப் பற்றிச் சொல்லடா செல்வம்...''

''என்னைப்பற்றி ?''

செல்வம் சிறிது நேரம் காட்டுவெளியை வெறித்துப் பார்த்தான். வேலியோரத்தில் ஒரு தனிக்குரங்கு அமர்ந்திருந்தது. கிளிகள் கிறீச்சிட்டபடி வானில் சென்றன.

"விடுதலையானதும் படித்தன்... ஏ. எல். எடுத்தன்... சித்தியடைந்தேன்... எஞ்சினியரிங் கிடைக்குமென எதிர்பார்த்துக் காத்திருந்தேன். மொத்தமாக 308 புள்ளிகள் எடுத்திருந்தேன்... தரப்படுத்துதலால் எனக்குப் பல்கலைக்கழகம் கிடைக்கவில்லை. என்னைப் போலப் பலர்... தகுதியிருந்தும் யூனிவேசிற்றிக்குப் போய் உயர்கல்வி படிக்க வாய்ப்பற்று ஏமாந்தனர்... எங்களிலும் பார்க்க குறைந்த புள்ளிகள் எடுத்த சிங்கள மாணவர்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைக்கவில்லை. தரப்படுத்துதலை எதிர்த்து நாங்கள் ஒரு ஊர்வலம் நடத்தினோம். நரேந்திரன் தான் மாணவர் பேரவை ஒன்றினை அமைத்தான். அவன் தான் தலைமை தாங்கி ஊர்வலம் நடத்தினான். ஊர்வலம் நடத்தியவர்களைப் பொலிசார் குறித்துக் கொண்டனர்..."

"பிறகு...?"

"யாழ்ப்பாணத்தில் எந்தக் குற்றம் நடந்தாலும் உடன் பொலிசார் என் வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தார்கள். அடிக்கடி என்னைப் பொலீஸ் நிலையத்துக்குக் கூட்டிச்சென்று விசாரித்தார்கள்... அடித்தார்கள். சித்திரவதை செய்தார்கள்... ஒரு குற்றமும் செய்யாத என்னை குற்றவாளியாக்க முயன்றார்கள்... என் அமைதி அழிந்தது... என் தாய் கண்ணீரும் கம்பலையுமாகத் தவித்தாள் என் தங்கச்சிமார் பயத்துடன் சீவித்தனர் எந்த நேரத்தில் பொலிசார் வீட்டிற்கு வருவார்களோ என்று பயத்துடன் காலம் கடத்தினோம்.

அடிக்கடி என்னை வந்து கைது செய்யும் அந்த இன்ஸ்பெக்டரை நான் வெறுத்தேன்... அவர் எனக்குச்செய்த சித்திரவதைகளுக்குப் பழிவாங்க என் உள்ளம் விரும்பியது... இந்த நிலையில் தான்...''

சின்னராசா காட்டுக் கத்தியை மரத்திடன் சார்த்தி விட்டு மரக்குற்றியொன்றில் அமர்ந்து கொண்டான். அவன் அருகில் செல்வமும் அமர்ந்து கொண்டான்.

தூரத்தில் மேய்ச்சல் முடிந்து மாடுகள் திரும்பி வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

செல்வம் தொடர்ந்தான்:

''நரேந்திரனைச் சந்தித்தேன். அவன் என்னிடம் ஒரு கைக்குண்டைத் தந்தான். இன்ஸ்பெக்டர் வரும்போது அவன் ஜீப்பிற்கு வீசி விடும்படி வழி கூறினான். அப்படியே துணிந்து செய்தேன். குண்டு விலகிவிட்டது... ஆனால் அந்த இன்ஸ்பெக்டர் என்னை அடையாளம் கண்டு கொண்டான்.. இது ஆறு மாதங்களுக்கு முன்னர் நடந்தது... அவர்கள் என்னை வேட்டையாடுகிறார்கள்... நான் தப்பி ஓடித் திரிகிறேன்...''

செல்வத்தை சின்னராசா பரிதாபமாகப் பார்த்தான்.

''நரேந்திரன் மிகுந்த தீவிரவாதி...''

''அவன் பின்னால் இளைஞர்கள் பலருள்ளனர்... அவன் சொன்னதைச் செய்யப் பலர் தயாராகவுள்ளனர்...''

''நீயும் அப்படித்தான் செல்வம்...''

" அவனை நான் சந்தித்தேன்... பொலிசார் என்னைத் தேடுவதைச் சொன்னேன்... பயந்தால் வெளி நாட்டிற்கு ஓடிவிடு என்றான். வெளிநாட்டிற்கு ஓடுவது என்ன இலேசான காரியமா...? அது சரிவராது என்றன்... அப்ப பொலிசில் சரணடை என்றான்... சரண் அடைந்து மீண்டும் அந்தக் கொடூரமான சித்திர வதைகளை அனுபவிக்கத் தயாரில்லை என்றன் .. அப்படியென்றால் .. என்னிடம் ஒரு றிவோல்வரைத் தந்தான்... அவனைச் சுட்டுவிடு... உன்னை எதிர்க்கின்றவர்களைச் சுட்டுவிடு... சமுதாயத் துரோகிகள் பலர் இருக்கிறார்கள் அவர்களையும் சுட்டுவிடு .. அப்பத்தான் நமக்கு விமோசனம்... தமிழ் மக்களுக்கும் விமோசனம் என்றான் . "

" நரேந்திரன் மிகுந்த தீவிரவாதி... ஆயுதப் போராட்டத்தின் மூலமே இலட்சியத்தை அடைய முடியுமென நினைக்கின்றான்... அவன் அறிவு பூர்வமாகச் சிந்திக்கவில்லை. உணர்ச்சி பூர்வமாகவே சிந்திக்கிறான்..."

செல்வம் சின்னராசாவை வியப்புடன் பார்த்தான்.

" அப்ப நீ எப்படி நினைக்கிறாய்?..."

" ஆயுதப் போராட்டம் தமிழ் ஈழம் காண்பதற்கு ஒரு மார்க்கமல்ல. பாதிக்கப்பட்டவர்கள் பழிவாங்குவதற்கு அதனை ஒரு வழியாகப் பாவிக்கலாம். ஆனால் ஆயுதப்போராட்டம் ஒரு இனத்தின் அழிவிற்கே வழி வகுக்கும் பெறுமதி வாய்ந்த உயிர்களைப் பறி கொடுத்து அந்தப் பிணமேட்டில் நீங்கள் நினைக்கின்ற இலக்கினை அடைய முடியாது..."

" இவர்களுடன் ஒற்றுமையாக இருக்க முடியுமென்று நீ நினைக்கிறாயா? எத்தனை தடவைகள் தமிழ் மக்கள் அடிபட்டார்கள்? உயிரிழந்தார்கள்— சொத்

துக்களை இழந்தார்கள் அரச படையினரின் வன்செயல்களால் யாழ்ப்பாண நகரம் கொழுத்தப்பட்டதை நீ மறந்து விட்டாயா? .. சிங்களவருடன் ஒருபோதும் இனி ஒற்றுமையாக வாழ முடியாது .''

'' நடந்து முடிந்த நிகழ்ச்சிகள் தெளிவாக அதனை வலியுறுத்துகின்றனதான். ஆனல், அறிவு பூர்வமாகத் தான் நாங்கள் குறிக்கோளை அணுகவேண்டும் .. அரசியல்வாதிகள் தங்கள் பாராளுமன்றச் சீற்றுக்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கூறுகின்ற உணர்ச்சி வசமான பேச்சுக்களைக் கேட்டுவிட்டு, நாங்கள் துடித்து நிற்கக்கூடாது... செல்வம், சிங்களவர் நம்மை அடக்குகிறார்கள் என்று கூக்குரலிடுகின்றோம்... ஆனல், அந்தச் சமூக அநீதி எம்மிடையே இல்லையா? சாதியின் பெயரால் நாம் எத்தனை மக்களை ஒதுக்கி வைத்திருக்கிறோம்? அவர்களைப் பாமரராய் விலங்குகளாய் நடத்தி வருகிறோம்... அவர்களுக்குரிய சமூக உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றனவே?...''

செல்வம் ஏளனமாகச் சிரித்தான்.

'' சின்னராசா நீ நினைப்பது போல இன்று சாதிக் கொடுமையில்லை. முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னர் இருந்த சமூக அமைப்பையும் இன்றுள்ள நிலையையும் புரியாமல் பேசுகிறாய்... சாதிக்கொடுமை இப்ப இல்லை...''

'' நீ செல்வம் யாழ்ப்பாண நகரத்தை மனதில் வைத்துக்கொண்டு கதைக்கிறாய்...''

'' ஓம்... அங்க உண்மையாக இப்ப செல்வாக்கானவர்கள் அவர்கள் தான் ''

"செல்வம், உண்மைதான். சொல்லுறது ஓரளவு சரிதான் அங்க இப்ப அவர்களில் பலர் பல துறைகளிலும் முன்னேறி விட்டார்கள். ஆனால் அவர்களும் இப்ப எப்படிச் சாதிமான்கள் என்று கூறிக்கொண்டு உயர்சாதிக்காரர் நடக்கினமோ அப்படித்தான் நடக்கினம், நடிக்கினம்... அவர்களும் தம் குலத்தவர்களின் இழிநிலையைச் சிந்திப்பதில்லை.. அங்கு ஒரு புதுச் சமூக நிலை உருவாகி வருகிறது... யாழ்ப்பாண நகரத்தை விட்டிட்டு புறக்கிராமங்களைப் பார்த்தால் உனக்கு அங்கு எப்படி இன்னமும் சாதித் தடிப்பும் வெறியும் வேரூன்றி இருக்கிறது என்பது புரியும்..."

"நீ சொல்கிற அளவில்லை..."

"உனக்கு வெளியுலகம் புரியவில்லை... நமது தமிழ்ச் சமூகத்திற்கு முதலில் தேவை சமூகப்புரட்சி.. பொருளாதாரப் புரட்சி... பின்னர் தான் நீ கருதுகிற அரசியல் புரட்சி. சாதி ஒருபுறம்... வறுமை ஒருபுறம் கல்வி மருத்துவ வசதிகள் இல்லாமல் வாடும் மக்கள் இன்னொரு புறம் சீதனம் என்ற கொடுமையால் வாழ்வற்றுப் பெருமூச்சு விடும் பெண்கள் ஒருபுறம்... விமானத்தில் பறக்கிற இந்த நாளில் தக்க பாதைகளின்றி சுடுவெயிலில் ஒற்றையடிப் பாதையில் பல மைல்கள் நடந்து செல்கின்ற மக்கள் இன்னொருபுறம்.. பள்ளிக்கூடங்களுக்கு நீச்சல் குளம் வேண்டும் என்கிற மக்களும்... ஒரு பள்ளிக்கூடமாவது கட்டித் தாருங்கள் என்று கேட்கிற மக்களும்... ரெலிவிஷன் யுகம் என்கிறோம்... ரேடியோவையே காணாத வீடுகள் எத்தனை? தண்ணீர் இல்லாத கிராமங்கள் எத்தனை? கிராமங்கள் தோறும் அடிமை குடிமை மக்கள் எத்தனை? இவர்களுக்கு முதலில் வழி செய்வோம்... எங்களை நாங்கள் முதலில் சீர்திருத்தி அமைத்துக் கொள்வோம்... அதன் பின்னர் தான்..."

செல்வம் நீண்ட நேரம் எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தான்.

## 5

இரவு அவர்கள் சாப்பிட்டார்கள். பானையில் நிறையச் சோறு மிச்சமிருந்தது. மூடி வைத்துவிட்டு முற்றத்தில் நிலவில் அமர்ந்து கொண்டார்கள்.

"கனக்கச் சோறு சமைச்சிட்டாய்... வீண்... அளவாச் சமைத்திருக்கலாம்..." என்ருன் செல்வம்.

"நான் என்ன பொம்பிளேயே செல்வம்... அளவாகச் சமைக்க... மிஞ்சினுல் காலமை சாப்பிடலாம்..."

வானத்தில் நிலவு எறிந்தது. முகிலற்ற வானம். நட்சத்திரங்கள் மின்னின.

"இந்த நிலவில் இந்த இடம் எவ்வளவு அழகாக இருக்குது தெரியுமா?... இந்த அழகை ரசித்தபடியே இப்படிப் படுத்திருக்கலாம் போல இருக்குது.." என்ருன் செல்வம்.

"உனக்கு வயிறு நிரம்பிவிட்டது... பசியில்லே... இயற்கையின் அழகைப் பேசுகிருய்... இந்த நிலவில... இந்த இரவில எத்தனே வயிறுகள் பசியால் தவிக்குதோ? துடிக்குதோ?"

செல்வம் நிமிர்ந்து உட்கார்ந்தான். சின்னராசாவை வியப்புடன் பார்த்தான்.

"உனக்குத் தெரியாது செல்வம்.. எனக்குத் தெரியும் இந்தக் கிராமத்தில் எத்தனையோ குடும்பங்கள் ஒருவேளை சஞ்சிக்கே வழியின்றித் தவிப்பது.. ஐந்தாறு பிள்ளைகள் தகப்பன் கூலியாக இருப்பான். கிடைக்கும் கூலி ஒரு வேளைக்கே போதாமல் இருக்கும்...

இன்றைக்கு ஒரு குடும்பம் உசிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழக் குறைந்தது முப்பது ரூபா தேவை உணவிற்கு மட்டும்... உடுப்பு.. மருந்துச் செலவு... இவற்றிற்கு வேறு. ஏழைத் தொழிலாளர் எங்க போவினம்...?"

கடப்பு அருகில் ஒரு உருவம் தயங்கி நிற்பது தெரிந்தது

சின்னராசா பார்த்தான். பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் நின்றிருந்தான்.

"மாணிக்கம், வா... இருக்குது..." என்றான் சின்னராசா.

மாணிக்கம் மகிழ்வுடன் கடப்பை ஏறிக் கடந்து வந்தான்.

சின்னராசா எழுந்து குடிசைக்குள் சென்றான். செல்வம் மாணிக்கத்தை நோக்கினான். அவன் அரையில் கிழிந்த சாரத்துண்டொன்றைக் கட்டியிருந்தான். ஒரு அடி அகலமான கிழிந்த துண்டு. தலை பரட்டை பற்றியிருந்தது.

"தம்பி... காற்சட்டை போடக்கூடாதா? இப்படிக் கிழிந்த துண்டைக் கட்டியிருக்கிறாயே?" என்று செல்வம் கேட்டான்.

மாணிக்கம் அவனை வியப்புடன் அதிசயப் பிராணியைப் போலப் பார்த்தான். அவன் கேள்வி அவனுக்குப் புரியவில்லை. அவன் வயிறு ஒட்டியிருந்தது. வாடிப் போய் நின்றிருந்தான்.

"தம்பி என்ன சாப்பிட்டாய்? "

"ஒன்றுமில்லை ..."

"மத்தியானம் ?"

"ஒன்றுமில்லை ?"

"காலமை ..."

"ஒன்றுமில்லை..."

துடித்துப்போய் அவனைச் செல்வம் பார்த்தான்.

"ஏன் சாப்பிடவில்லை...?"

"இருந்தால் தானே சாப்பிடுவதற்கு? .."

"உனக்கு ஐயா அம்மா இல்லையா? ..."

"இருக்காங்க... ஐந்து சகோதரங்கள் இருக்குது .."

"ஐயா உழைப்பதில்லையா ...?"

"காவலுக்குப் போறவர்... போனல் பத்து ரூபா கிடைக்கும்... மூன்று நாளாகக் காச்சலாகப் படுத்திருக்கார்..." என்றபடி அச்சிறுவன் ஆவலுடன் குடிசை வாசலைப் பார்த்தான். செல்வத்தின் இதயம் கனக்கத் தொடங்கியது.

அவனுக்குப் பரிச்சயமில்லாத ஒரு உலகு தெரியத் தொடங்கியது.

சின்னராசா ஒரு பாத்திரத்துடன் வெளியில் வந்தான். எஞ்சியிருந்த சோறு கறிகள் அதனுள் இருந்தன. ஆவலுடன் கண்களில் நன்றி பொங்க இரு கரம் நீட்டி வாங்கிக் கொண்டான்.

மாணிக்கம் வெளியேறியதும் செல்வம் சின்னராசாவைப் பார்த்தான்.

"மிக வறிய குடும்பம் மாணிக்கத்தின்... வீட்டில் ஒரே பஞ்சமும் பசியும். சாப்பாடு இல்லாத வேளைகளில் பசி பொறுக்க முடியாத வேளைகளில் மாணிக்கம் இங்க வருவான். இருக்கிறதைக் கொடுத்து விடுவன், எழு பேருக்கு இது காணுமா? நாள் முழுதும் பட்டினி கிடக்கிற ஒரு குடும்பத்துக்கு இது காணுமா? மாணிக்கத்தின் தகப்பன் இராசு உழைக்கிறது ஒரு வேளைக்குப் பத்தாது... அது ஒரு வாயில்லாப் பூச்சி. மாடு மாதிரி வேலை செய்திட்டு கொடுக்கிறதை வாங்கி வரும்... இப்ப கொஞ்ச நாளாக அவனுக்கும் சுகமில்லை... படுத்த படுக்கையாகக் கிடக்கிறான் அந்த வீட்டில பசியால் பட்டினியால் .. சாய், என்ன வாழ்க்கை?... நீ இப்ப பார்த்தியே செல்வம்... அவன் கட்டியிருக்கிற துண்டை? அது நான் கொடுத்த பழஞ்சாரம்... அதைத் தான் மூன்றாக்கி மூன்று பேர் அந்தக் குடும்பத்தில கட்டியிருக்கினம் என்றால் நீ நம்ப மாட்டாய்? .. அவ்வளவு வறுமை... இப்படி எத்தனை குடும்பங்கள்? இவர்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு நீங்கள் என்ன திட்டம் வைத்திருக்கிறியள்? ..."

"எங்களுக்கு என்று ஒரு நாடு கிடைத்தால் இதெல்லாம் சரியாகிவிடும்..."

"அதுக்கிடையில் இதுகள் இருக்கிற இடத்தில புல் முளைத்துவிடும்... செல்வம் .. அவர்களுக்குச் சொந்தமாகக் காணிகள் இல்லை. காணிகள் வழங்கி அதில் அவர்கள் பயன்பெறுமளவிற்கு பண உதவிகள் வழங்க வேண்டும்... தொழில் வழங்க வேண்டும். அதற்குரிய ஊதியம் வழங்கவேண்டும் ..."

செல்வம் மௌனமாக அமர்ந்திருந்தான். அவன் வறுமையைச் சந்திக்கவில்லை. அவன் குடும்பம் வசதியானது. பசி என்பதை அவன் உணர்ந்ததில்லை.

வானத்தைப் பார்த்தான் நிலவு அவன் உள்ளத்தை அனலாக எரித்தது,

## 6

இரண்டு நாட்களாக அவர்கள் காலையில் பழஞ் சோற்றையே தின்றூர்கள். மாணிக்கம் இரவில் வருவான் என்று நம்பி சின்னராசா கூடுதலாகச் சோறாக்கி ஏமாந்தது தான் மிச்சம்.

மாணிக்கம் ஏன் வரவில்லை ?

மாணிக்கம் வந்தால் தனது சாரம் ஒன்றினைக் கொடுத்து விடவேண்டும் என செல்வம் எண்ணியிருந்தான்.

மூன்ரும் நாள் மாலை. தோட்ட வேலை முடிந்த கையோடு செல்வம் கேட்டான்:

'' மாணிக்கம் வீடு உனக்குத் தெரியுமா, சின்ன ராசா?...''

'' தெரியும் .. வாறியா? போய்ப் பார்ப்போம் ..''

இருவரும் குளித்துவிட்டுப் புறப்பட்டனர். உண்மையில் செல்வம், மாணிக்கத்தின் வீடு மிக அருகில் இருக்கும் என எண்ணியிருந்தான். மூன்று மைல்கள் வரையில் ஒழுங்கற்ற பாதைகளில் நடந்து மிதந்த பின்பே மாணிக்கத்தின் வீட்டை அடைய முடிந்தது.

"இவ்வளவு தூரம் நடந்தா, கொஞ்சச் சோத்திற்கு அவன் வாருன்?"

"பசி வந்தால் தூரமென்ன?... தன்னந் தனியா இரவில இந்த யானைக்காட்டிற்குள்ளால் வந்துதான் மிச்ச சோத்தை வாங்கிச் செல்கிருன்..."

"என்ருலும் பரிதாபத்திற்குரியவர்கள்... சின்ன ராசா..."

அவர்கள் வருவதைக் கண்ட மாணிக்கம் அவர்களிடம் வந்தான். அவன் முகம் வாடி இருந்தது.

"ஏன் மாணிக்கம், இரண்டு நாளாக வரவில்லை?..."

"ஐயா நேற்று ஆஸ்பத்திரியில் செத்துப்போனுர்..."

இருவரும் ஒருகணம் விக்கித்துப் போனுர்கள். மாணிக்கத்தைப் பரிதாபமாகப் பார்த்தனர்.

மாணிக்கம் முன்னே நடக்க அவர்கள் பின் தொடர்ந்தனர். மரண அமைதி.

சிறிய குடிசை. இந்தக் குடிசைக்குள்ளா ஏழுபேர் வாழ்ந்தார்கள்? மழை பெய்தால் இந்தக் குடிசை தாங்காது.

மாணிக்கத்தின் தாய் வாசலில் முடங்கிக் கிடந்தாள். அவளால் அந்த இழப்பைத் தாங்க முடியவில்லை. மாணிக்கத்தின் பின் பிறந்ததுகள் குடிசைக்குள் அமர்ந்திருந்தன. அவற்றின் கைகளில் ஒவ்வொரு சிறு துண்டு காய்ந்த பாண். அதனை அவர்கள் ஆவலுடன் சாப்பிட முயன்றனர்.

"செத்த வீடு எப்ப நடந்தது?..." என்று செல்வம் கேட்டான்.

மாணிக்கம் அவனை வியப்புடன் பார்த்தான்.

"செத்த வீடா?... ஆஸ்பத்திரியில் செத்தவர். அவங்கள்தான் தாட்டவங்கள்."

இறந்த மனிதனை எடுத்து வந்து இறுதிக் கிரியைகளைச் செய்யக்கூட வசதியில்லை.

வறுமை... வறுமை... பசி... பசி...

"நான் இண்டைக்கு வேலைக்குப் போனன்... இரண்டரை ரூபா உழைச்சன்... அதுக்குப் பாண் வாங்கி வந்தன்..."

சின்னராசா மௌனமாகப் பார்த்திருந்தான். அக்குடும்பத்தின் நிலை அவனைக் கலங்க வைத்தது.

"நீயும் உன் அம்மாவும் நாளைக்கு என்ர தோட்டத்திற்கு வேலைக்கு வாருங்கோ..."

மாணிக்கம் அவனை நன்றியுடன் பார்த்தான். அந்தப் பிஞ்சு விழிகளில் தெறித்த மகிழ்ச்சி.

"நான் வாறன்... அம்மா வரமாட்டா... அவவுக்கு வேலை செய்தால் வலிப்பு வரும்... இழுப்பு வரும்..."

இவர்கள் வந்ததைக் கண்ட மாணிக்கத்தின் தாய் கஷ்டப்பட்டு எழுந்து அமர்ந்தாள். சுகயீனத்திற்கு மேலால் பசிக்களை தெரிந்தது

"வீட்டிற்கு வாறியா மாணிக்கம் சாப்பாடு தாறன் எடுத்து வந்து எல்லாருக்கும் கொடு..." என்று சின்னராசா கேட்டான்.

"வேண்டாம், தம்பி... எத்தனை நாளைக்குத்தான் நீங்களும் தருவியள்...?" என்றாள் கலங்கியபடி மாணிக்கத்தின் தாய்: "நாங்க யாருமற்ற அனாதைகள்... எங்களுக்கும் யாருமில்லை, எங்களைக் காப்பாற்றிய அவரும் போய்ச் சேர்ந்திட்டார். இனி நாங்க ஏன் இருப்பான்? ஆரை நம்பி இருப்பான்? "

அவ்விடத்தில் துயரம் கவிந்து கிடந்தது. மாணிக்கம் அவர்களுடன் வந்தான்.

அந்தப் பன்னிரண்டு வயதுப் பாலன் சோற்றைக் காவிக்கொண்டு திரும்பி வரும்போது இரவு ஒன்பது மணியிருக்கும்.

அன்றிரவு முழுவதும் செல்வத்தால் தூங்க முடியவில்லை. இப்படியும் ஒரு வறுமையா! இந்த நாட்டில் இப்படி எத்தனை குடும்பங்களோ?...

இந்த நாட்டு மக்களில் ஒரு பகுதியினருக்கு இன்னமும் பொருளாதாரச் சுதந்திரம் கிடைக்கவில்லை. மாணிக்கம் குடும்பத்தின் துயரில் அவன் தன் துயரத்தை மறந்திருந்தான்

வீட்டில் அம்மா எப்படியோ? தங்கைகள் எப்படியோ? அவர்களை நிம்மதியாகத் தூங்கவாவது ஆமிக்காரரும் பொலிசாரும் விடுகினமோ?

நள்ளிரவில் ஒரு ஜீப் விரைந்து வரும் சத்தம் கேட்டு செல்வம் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். ஜீப் அவன் தோட்டப்பக்கமாக வரவில்லை. ஏதோ டிப்பாட்மென்ட் ஜீப்பாக்கும். அதன் பின்னர் அவனால் தூங்க முடியவில்லை.

பொலிஸ் நிலையத்தில் அவனுக்கு நடந்த சித்திர வதைகள் நினைவு வந்தன.

அப்படியொரு நிலை எவருக்கும் வரக்கூடாது. சீ... எவ்வளவு கொடூரம்? அப்பாவிகளைச் சித்திரவதை செய்வதில் இவர்களுக்கு ஏன் தான் இப்படியொரு ஆசையோ ?

அவனோடு படித்தவர்களில் சிலர் இன்று நல்ல உத்தியோகத்தில் உள்ளனர். அவன் மாத்திரம் இப்படி ஆகிவிட்டான். உண்மையில் அவனும் ஒரு எஞ்சினியராக வந்திருக்கலாம். இரண்டாம் தடவை பரீட்சை எடுத்திருந்தால் நிச்சயமாக வந்திருப்பான். ஆனால் அவர்கள் விடவில்லை. ஊரில் நடக்கின்ற ஒவ்வொரு குற்றங்களுக்கும் அவனையே அழைத்துச் சென்றனர்.

அடி.. உதை... குத்து... நாக்கினைப் பிடுங்கிக் கொண்டு சாகும்படியான கெட்ட ஏச்சுக்கள்... ஒவ்வொரு அடியும் உதையும் விழும்போது அவன் எண்ணிக் கொள்வான்; "உங்களைப் பழிவாங்காமல் விட மாட்டேன்."

'நான் ஏன் நரேந்திரனுடன் சேர்ந்தேன்? என் பழி வாங்கலிற்காக நரேந்திரனுடன் சேர்ந்தேனா?'

தெளிவாக விளக்கம் தெரியவில்லை.

படுக்கையை விட்டு எழுந்து வெளியில் வந்தான். விடியா இரவு.

தோட்டத்தின் அடி வளவில், தறித்த மரங்களின் அடிக்கட்டைகளை எரிப்பதற்காக நேற்றிரவு சின்ன ராசா நெருப்பிட்டிருந்தான். அவை இப்போது காற்றின் வீச்சில் கொழுந்துவிட்டெரிந்தன.

நெருப்புத்தணல் துண்டுகளை அடிமரக்கட்டைகளின் காய்ந்த பொந்துகளில் சின்னராசா இட்டிருந்தான். காற்றின் வருடலால் தணல் எரியத் தொடங்கிவிட்டது.

ஒரு சிறு பொறி ஒரு காட்டையே எரித்துவிடும். நரேந்திரன் அன்ெருரு நாள் அப்படித்தான் சொன்னுன்: "நமது தாயக விடுதலைக்காக நாங்கள் போராடுகிருேம். நாம் இளைஞர்கள் தான் ஒரு சிலர் தான். ஆனல் நாங்கள் தீப்பொறிகள், அநியாயங்களைச் சுட்டெரிக்கப் புறப்பட்டிருப்பவர்கள்."

சின்னராசா சொல்கிருன்: "நமது சமூகத்தில் சுட்டெரிக்க வேண்டியவை எத்தனையோ இருக்கின்றன வறுமை .. சாதித் துவேஷம் .. சீதனக்கொடுமை... வர்க்க வேறுபாடு...! கிராமத்திற்குக் கிராமம் சமூகநல ஏற்றத்தாழ்வுகள் .. இவை முதலில் சுட்டெரிக்கப்பட வேண்டும். சிறு கோபத்திற்காக மாறி மாறிக் குடும்பங்களைச் சுட்டும் வெட்டியும் அழித்துக் கொள்கின்ற சமூகம் நம்முடையது. ஒரு தேங்காய்க்காக இரு கிராமங்கள் ஒருவரை மாறி ஒருவர் வெட்டிக்கொண்டது உனக்குத் தெரியாதா? நாங்கள் ஒற்றுமைப்பட வேண்டும். எங்களது ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும். எங்களிடமிருக்கின்ற சமூகக் கொடுமைகள் நீக்கப்பட வேண்டும்... அதன் பிறகு நீங்கள் நம்புகிற அந்த இலட்சியத்திற்குப் போராட முடியும்..."

நரேந்திரன் சொன்னுன்: "நமது தாய்மொழிக்கு இந்த நாட்டில் உரிய இடமில்லை. நமது தமிழ்ப்பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நடக்கின்றன. நமது பிரதேசங்கள் படிப்படியாகப் பறிபோய்க்கொண்டிருக்கின்றன... நாம் காலத்திற்குக் காலம் சிங்களக் காடையர்களால் தாக்கப்படுகின்ருேம். தமிழ் ஈழத்திற்கு வெளியில் மட்டுமல்ல... யாழ்ப்பாணத்திற்குள்ளும் கூட நாம் தாக்கப்படுகின்ருேம். சுடப்படுகின்ருேம் .. நகரங்கள் கொளுத்தப்படுகின்றன... இவற்றிற்கு முடிவு...? ஆயுதப்போராட்டம் தான்..."

சின்னராசா சொல்கிறன்: “ ஆயுதப்போராட்டத்தால் இந்த யுகத்தில் ஒன்றும் பெரிதாகச் சாதித்துவிட முடியாது... அழிவுகள் தான் மிஞ்சும்... பலஸ்தீனியருக்கு நடந்தது என்ன?... அரபு நாடுகள் யாவும் தங்கள் போராட்டத்திற்கு உதவும், ருசிய வல்லரசு உதவும் எனக் கடைசி வரை எதிர்பார்த்து ஏமாந்து போனர்கள். இன்று திசைக்கொருவராகச் சிதறடிக்கப்பட்டிருக்கிறர்கள். அவர்களின் உயர் இலட்சியத்தையும் அந்த இலட்சியத்திலுள்ள நேர்மையையும் உரிமையையும் நாம் மறுக்கவில்லை... இன்று உங்கள் சக்திகள் எல்லாம் நமது சமூகத்தில் இருக்கின்ற கொடுமைகளை நீக்க ஒன்று திரட்டப்பட வேண்டும்...”

எரிந்து கொண்டிருந்த மரக்கட்டையிலிருந்து தெறித்து விழுந்த அக்கினிக் குஞ்சொன்று கீழே மண்டிக் கிடந்த புற்களை எரிக்கத் தொடங்கியது.

செல்வம் கிணற்றுக்கட்டில் அமர்ந்து கொண்டான். எவ்வளவு நேரம் அப்படி அமர்ந்திருந்தானே தெரியாது.

மாணிக்கம் அவலமாக ஓடிவந்து கடப்பைத் தாண்டி முற்றத்தில் வந்து விழுந்ததை அவன் கண்டான். மாணிக்கத்தால் எதுவும் பேச முடியவில்லை. விம்மி விம்மி அழுதான். பெருங்குரலில் அழுதான்.

சத்தம் கேட்டு சின்னராசா வெளியில் வந்தான். மாணிக்கம் அவனைக் கண்டதும் பெரிதாக அழுதான்.

“ என்ன மாணிக்கம் என்ன நடந்தது?...”

"எல்லாரும் போயிட்டாங்க, அண்ணை... எல்லாரும் என்னை விட்டிட்டுப் போயிட்டாங்க..."

"எங்க போயிட்டாங்க..." என்று செல்வம் கேட்டான். அவனைச் சின்னராசா கோபத்துடன் பார்த்தான். அவன் பார்வையின் அர்த்தம் செல்வத்திற்கு விளங்கவில்லை.

"என்ன நடந்தது மாணிக்கம்...?"

மாணிக்கம் குலுங்கிக் குலுங்கி அழுதான்.

"அம்மா... தம்பிகள்... தங்கச்சிமார் எல்லாரும்.. ஐயோ... கிணற்றில தூக்கிப் போட்டிட்டு... எல்லாரும் செத்து ஓ..." மாணிக்கம் தலையில் அடித்தபடி நிலத்தில் விழுந்து அழுதான். செல்வமும் சின்னராசாவும் அப்படியே கல்லாக அமர்ந்து விட்டார்கள்.

எவ்வளவு கொடுமை? அநியாயமாக நான்கு உயிர்கள் பறிக்கப்பட்டுவிட்டன. யார் இதற்குப் பொறுப்பு?... யார்? யார்?...

அவர்கள் மாணிக்கத்தின் குடிசைக்கு வந்தபோது, உயிரோடு இருக்கும்போது உதவாத சமூகம் அங்கு கூடியிருந்தது. கிணற்றிலிருந்து தூக்கி வளர்த்தியிருந்தார்கள்.

செல்வம் கலங்கி நின்றான்.

"இந்த மனிசி செய்த வேலையைப் பார் தம்பி... குழந்தைகளைத் தூக்கிக் கிணற்றில் போட்டுவிட்டுத் தானும் குதித்து .. மண்டையெல்லாம் சிதறி.. சாகிற

மனுசி, ஒரு போத்தல் மருந்தை வாங்கி இதுகளுக்குக் கொடுத்துச் செத்திருக்கலாம் '' என்ருர் அங்கிருந்த ஒரு பெரியவர்.

சின்னராசா புயலெனச் சீறினன்: '' அப்படி மருந்து வாங்க அந்த மனிசிக்குக் காசிருந்தால், அதுக்கு அந்தப் பிள்ளைகளுக்கு ஒரு வேளை சாப்பாடு வாங்கியிருக்கும்... ஒரு நாள்கூட அதுகள் உயிர் வாழ்ந் திருக்கும்.''

# 7

மத்தியான வேளை. அவர்கள் குடிசைக்குள் அமர்ந் திருந்து சமையலைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். முற்றத்தில் மிளகாய்ப் பழங்களைக் காயவைத்துக் கொண்டிருந்த மாணிக்கம் குடிசைக்குள் எட்டிப் பார்த்தான்.

'' அண்ணை... விதானையார் வாருர் .''

சினனராசா செல்வத்தைக் கேள்விக் குறியுடன் பார்த்தான்.

'' செல்வம்... நீ எதற்கும் வெளியில் வராதை... நான் என்னென்று கேட்டு வாறன்.''

சின்னராசா வெளியில் வந்தான். விதானையார் கடப்பை ஏறிக் கடந்து வந்தார்.

'' என்ன வெயில்... என்ன வெயில்... தம்பி சின்ன ராசா, எப்படி உன்ர தோட்டம்... பரவாயில்லைப் போல இருக்குது... நீ பிரயாசை... எட உவன் இராசு வின்ர பொடியும் உன்னோடையே... கேள்விப்பட்டன் ..''

விதானையார் தென்னை மரத்தடியில் போடப்பட்டிருந்த மரக்குற்றியில் அமர்ந்தபடி, தென்னை மரத்தை அண்ணார்ந்து பார்த்தார். இளநீர்க்குலை தாகத்தைத் தந்தது.

" மாணிக்கம் இரண்டு இளனி பறி " என்றான் சின்னராசா: " ஏதாவது அலுவலே விதானையார் ...?"

விதானையார் அவனை ஊடுருவிப் பார்த்தார்.

" தம்பி சின்னராசா, நீ நல்ல பிள்ளை ஒழுங்கானவன் சேலி சுரட்டிற்குப் போகாதவன் ..." விதானையாரின் பீடிகை சின்னராசாவிற்கு கலக்கத்தைக் கொடுத்தது.

விதானையார் தொடர்ந்தார்: " நேற்று இரண்டு பேர் என்னிடம் வந்தார்கள் .. பொலிஸ் சி. ஐ. டி மார்... உன்னைப் பற்றி விசாரிச்சினம்... நான் நல்லாச் சொல்லியிருக்கிறன். உன்னோடை ஆராவது யாழ்ப்பாணத்துப் பொடியன் வேலை செய்கிறுனு என்று கேட்டினம்... நான் இல்லை என்றிட்டன் அவர்கள் நம்பவில்லை போயிட்டாங்கள்... அவர்கள் யாரையோ தேடுறுன்கள் என்று தெரியுது. இந்தக் கிராமத்தில பொலிஸ் ஆமி என்று வந்து அமைதியைக் கெடுக்கிறது கூடாது உனக்கு ஒன்று சொல்லுறன் அப்படி யாராவது பொடியன் உன்னோடை இருந்தால் இன்றைக்கே எங்காவது அனுப்பிவிடு... இன்றிரவு அவர்கள் நிச்சயமாக வருவாங்கள் .. உன் தோட்டத்தில் சோதனை போடுவான்கள்... வீண் பிரச்சனைக்குள்ளாக்கிடாதை... சரியே நான் சொல்கிறது ? "

விதானையாரை சின்னராசா நன்றியுடன் பார்த்தான், மாணிக்கம் வெட்டித்தந்த இளநீரை விதானையார் அருந்தினுர்.

"உதேன் பின் நிலத்தைச் சும்மா விட்டிருக்கிறாய்... காடு தானே? ஒரு ரெண்டு ஏக்கரை பிடித்து வெட்டன்.." என்றார் விதானையார்.

"நீங்கள் தந்தால் வெட்டுறன்... சட்டத்திற்கு மாறாக வெட்ட எனக்கு விருப்பமில்லை."

"எல்லாரும் தான் அடாத்தாக வெட்டுகினம்... நீ பயப்படுகிறாய்..."

"எல்லாரும் அப்படியென்றதுக்காக நானும் அப்படி இருக்க வேண்டுமே, விதானையார்? இருக்கிற காணியையே சரியாகச் செய்ய முடியவில்லை. இல்லாதவை யாராவது வெட்டட்டும்" என்றான் சின்னராசா.

சற்று நேரம் விதானையார் அங்கிருந்து பலதும் பத்தும் பேசிக்கொண்டிருந்தார்

விதானையார் சென்றதும் சின்னராசா குடிசைக்குள் வந்தான்.

செல்வம் தனது பையைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆயத்தமாக நின்றிருந்தான்.

அவன் கண்கள் கலங்கியிருந்தன, சின்னராசாவின் விழிகள் பனித்தன. அப்படியே செல்வத்தை மார்போடு கட்டிக்கொண்டான். மௌனமாக இருவரும் அழுதனர்.

"நான் போய் வாறன், சின்னராசா"

"எங்க போகப் போறாய் செல்வம்?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை"..

''கொஞ்ச நாளைக்கு மதிவாணனோடு போய் இரன்... அவன் படிப்பிக்கிறான். அது சரியா உள்ளுக்கு பயப்படத் தேவையில்லை... இங்க நிலமை சீரானதும் நான் கடிதம் போடுறன்...''

''சரி அதுதான் சரி... நான் வாறன், சின்ன ராசா...''

''சாப்பிட்டுவிட்டுப் போ செல்வம்.. உனக்காக நான் வேதனைப்படுகிறன்.. ஏன் இப்படிச் சிக்கிக் கொண்டாயோ? ..''

## 8

அவன் அந்தக் கிராமத்தை வந்தடைந்த போது மாலை கவிந்து கொண்டிருந்தது. அக்கிராமத்தில் ஒருவித பதட்டமும் அதனால் அமைதியின்மையும் நிலவுவதாக அவனுக்குப்பட்டது. அக்கிராமத்தின் மண் ஒழுங்கையால் அவன் நடந்து சென்றான்.

பிள்ளையார் கோயில் குறுக்கிட்டது. பிள்ளையார் கோயில் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. வாழைகள், தோரணங்கள், சப்பறங்கள் என்பன கட்டப்பட்டிருந்தன. தேர் அலங்கரித்து நின்றிருந்தது. ஆனால் ஒரு சிலரே அங்கு குழுமி நின்றிருந்தனர்.

ஒரு கிராமத்தின் ஒரு திருவிழாவில் இப்படிப்பட்ட அமைதியை அவன் கண்டதில்லை. பிள்ளையாரைக் கும்பிட்டுவிட்டு அவன் மேற்கு நோக்கி நடந்தான் வழியில் எதிர்ப்பட்ட ஒரு சிலர் அவனை உற்றுப் பார்த்தனர்.

மதிவாணனின் இடத்தைக் கண்டுபிடிப்பதில் கஷ்ட மிருக்கவில்லை. அவன் அக்கிராமத்தின் பாடசாலையொன் றின் ஆசிரியன். பள்ளிக்கூடத்தின் அருகிலுள்ள குவாட் டர்சில் தனியனாக இருக்கிறான்.

செல்வத்தை அவன் வியப்புடன் பார்த்தான். எதிர் பாராத சந்திப்பு.

நீண்ட காலத்திற்குப் பின்னர் சந்திக்கிறார்கள்.

"வாடா செல்வம்..." என்று அவன் உரிமையுடன் வரவேற்றான்.

"உன்னோட ஒரு ஐந்து நாட்கள் நான் தங்கியிருக் கப் போகிறன்... அதில உனக்குக் கஷ்டமில்லையே?..." என்று செல்வம் கேட்டான்.

"என்னடா பெரிய வார்த்தையெல்லாம் கதைக் கிறாய்... எத்தனை நாள் வேண்டுமோ அத்தனை நாள் இரு... எவரும் எதுவும் கேக்க மாட்டினம்.. எனக்கு எல்லாம் தெரியும்.. ஒண்டுக்கும் கவலைப்படாமல் இரு... ஆபத்திலை உதவாவிடில் பிறகென்ன நட்பு...?"

"நன்றியடா, மதி..." செல்வத்தின் விழிகள் கலங் கின. மதிவாணன் ஆதரவோடு அவன் தோள்களில் கரம் பதித்தான்.

"நல்ல நேரத்தில் தான் நீ வந்திருக்கிறாய்...? இந்தக் கிராமத்தில் இப்ப சாதிச் சண்டை தலை தூக்கிவிட்டது... சாதி வெறி தலை தூக்கியிருக்குது ... என்ன நடக்குமோ தெரியாது "

' அதுதான் கிராமம் இப்படி அமைதியாக இருக்குதா? வரும் வழியில் அவதானித்தேன். திருவிழாவில் கூட சனமில்லை...''

'' அங்குதான் பிரச்சினை ஆரம்பம் '' என்றான் மதிவாணன்.

''இப்பவும் இப்படிச் சாதிப் பிரச்சினையா?...''

மதிவாணன் சிரித்தான். செல்வத்தின் அறியாமையை எண்ணிச் சிரிப்பது போலப்பட்டது.

'' ரவுனில் இருக்கும்போது அப்படித்தான் செல்வம் நானும் நினைத்திருந்தன். அங்க எங்களுக்கு இது தெரிவதில்லை. இப்படிப்பட்ட கிராமப்புறங்களில் அதன் விஸ்வரூபத்தைக் காணலாம். கோயில்களுக்குள் போவது... தேநீர்க்கடைகளில் சமமான இடமின்மை... பள்ளிக்கூடங்களில் அனுமதியின்மை .. கிடைத்தாலும் பிரிவினை காட்டல்... கிணறுகளில் தண்ணீர் அள்ளத் தடை இப்படி எத்தனையோ அநியாயங்கள் இக்கிராமத்தில் நடக்கின்றன. ஒரு பகுதியினருக்குள்ள உரிமைகள் இன்னொரு பகுதியினருக்கு மறுக்கப்படுகின்றன... ''

'' அப்படித்தான் சின்னராசாவும் சொன்னான்... மதி ''

மதிவாணன் தேநீர் கலந்து கொடுத்தான். செல்வம் வாங்கிப் பருகினான்.

'' உங்களைப் பார்க்க எனக்குப் பொறாமையாக இருக்குடா மதி... அங்க தோட்டம் செய்து கொண்டு சின்னராசா சமைத்துச் சாப்பிடுகிறான்... இங்க படிப்பித்துக் கொண்டு நீ சமைத்துச் சாப்பிடுகிறாய் ஏன்ராப்பா ஒரு கலியாணத்தைச் செய்து கொண்டால் என்ன? ''

மதிவாணன் பெரிதாக ஓவெனச் சிரித்தான். தான் அப்படிச் சிரிக்கத் தக்கதாக என்ன கேட்டுவிட்டேன் எனச் செல்வம் குழம்பினுன்.

"என்னடா, மதி?"

"எனக்கொரு கலியாணம்... பயித்தியக்காரா... எனக்கு முந்திப் பிறந்த இரண்டு அக்காமார் இருக்கினம்... மூத்த அக்காவிற்கு முப்பத்தாறு வயதாகுது. ஒரு மாப்பிள்ளை எடுக்க முடியவில்லை... இலட்சக்கணக்கில் சீதனம் கேக்கிருன்கள்... இரண்டாம் அக்காவிற்கு முப்பத்திரண்டு வயது... ஒரு மச்சான் அவளைக் காதலித்தான். காதலித்துவிட்டுக் கலியாணம் கட்டச் சீதனம் தரட்டாம் தாலி கூறைக்கும் தரட்டாம்.. எனக்குப் பிறகு ஒரு தங்கச்சி இருக்கிருள்... இவ்வளவு பேர் வாழாவெட்டியாக இருக்கினம். ஏன்...? ஏன்...? உனக்குத் தெரியுமா? சீதனம்... நான் ஒருவன்தான் உழைக்கிறன்... எடுக்கிற பிச்சைச் சம்பளம் சாப்பாடு போடவே காணுது இந்த நிலையில் எனக்கொரு கலியாணம்"

செல்வம் மௌனமாக அவனைப் பார்த்தான். அவனுல் எதுவும் பேச முடியவில்லை.

"என்ன செல்வம் பேசாமல் இருக்கிருய் - தமிழ் ஈழம் வந்தால் இதெல்லாம் தீர்ந்திடும் என்கிருயா?..."

"சீச்சி... அப்படியில்லை .."

"பின்ன எப்படி?... சீதனம் வாங்கிறதுக்கும் கொடுக்கிறதுக்கும் எதிராக ஒரு சட்டத்தை இந்தியா மாதிரி கொண்டுவரக்கூடத் தெரியாத எங்கட எம்.பி.க்களால் நமக்கு நமது சமூகத்திற்குச் சுபீட்சம் வருமா?... இலகுவில் நிறைவேற்றக்கூடிய பிரச்சினைகளை அவர்கள்

கவனத்திற்கு எடுக்கமாட்டார்கள் ஏனெனில் அப் பிரச்சினைகள் தீர்ந்தால் பிறகு அவர்கள் ஏன்? .. எனவே இலகுவில் தீராத பிரச்சினைகளை மக்கள் முன் வைத்துக் காலத்தைக் கடத்துவதுதான் எம்: பி.மாரின் வேலை... இவர்கள் எல்லாம் வாய்ச்சொல் வீரர்கள்... மேடை களில் பலவற்றை முழங்குவார்கள்... உணர்ச்சி பூர்வ மாக முழங்குவார்கள்... நீ கூட, ஏன் உன் போன்ற பலர் அவர்களின் பேச்சில் மயங்கித்தான் இப்படித் தீவிரவாதிகள் ஆனீர்கள்? பேச்சுக்களை அவர்கள் மறந்து விட்டார்கள்... நீங்கள் மறக்கவுமில்லை... மறக்க முடியாதளவிற்குச் சிக்கிக் கொண்டும் விட்டீர்கள் ..''

"நீ சொல்வதை முற்றாக ஏற்றுக்கொள்ள முடி யாது...'' என்றான் செல்வம்: ''நாங்கள் இத்தளவிலா வது தலை நிமிர்ந்து நிக்கிறம் எண்டால் அவர்களால் தான் .''

வெளியில் ஏதோ கலகலப்பு எழுந்தது. யன்னலூடா கத் தூரத்தில் தீ கொழுந்து விட்டெரிவது தெரிந்தது. இருவரும் அறைக்கு வெளியில் வந்தனர்.

''பள்ளற்ற குடிசைகளுக்கு நெருப்பு வைச்சிட்டான் கள்...'' என்றபடி ஒருவன் ஒழுங்கையில் விரைந்தான்.

'யார் வைத்தது ?'' என்று செல்வம் கேட்டான்.

''வேறை யார்... உயர் சாதிக்காரர்தான்...'' என் றான் வெறுப்புடன் மதிவாணன்: ''இன்னும் என்னென்ன நடக்கப் போகுதோ?... இரண்டு பகுதியும் வெட்டிக் கொள்ளப் போறாங்கள்...''

# 9

இரவு சாப்பிடும் போது மதிவாணன் விபரித்தான்.

''அடிமை குடிமை முறைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களையும், நிலவுடைமையில் ஆதிக்கம் வகிப்போரையும் உள்ளடக்கிய சாதிப்பிரிவினரைக் கொண்டது இக்கிராமம்... பள்ளர், கோவியர் என்ற இரு சமூகங்கள் இங்கு அடிமை குடிமை முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர், இவ்விரு பகுதியினரும் இங்கு ஏறத்தாழ எழுபத்தைந்து சதவீதமானவர்கள்... இதில் பள்ளர்கள் அறுபது சதவீதமானவர்கள்... ஆக உயர் சாதியினர் என்று சொல்லப்படுபவர்கள் ஆக இருபத்தைந்து சதவீதம்தான் அப்படியிருந்தும் நிலங்களில் தொண்ணூறு சதவீதம் இவர்களுக்குச் சொந்தம்... வேளாளர்தான் இங்கு உயர் சாதியினர் என்று சொல்லிக் கொள்கிறார்கள் ''

'' வேளாளருக்குள் காணி இல்லாதவர்கள் இல்லையே?...'' என்று செல்வம் கேட்டான்.

''இருக்கினம்... பலர் இருக்கினம்.. ''

''மற்றவர்கள் என்ன தொழில் செய்யினம்? ''

''குத்தகை விவசாயிகளாகவுள்ளனர்... சிலர் மேசன் தொழிலாளராகவுள்ளனர்... சிலர் உடல் உழைப்பை விற்று வாழும் கூலியாட்களாகவுள்ளனர்.. இவர்கள் மிக வறியவர்கள்...''

''இவர்கள் இருப்பது யாருடைய காணிகள் ?''

''சில வேளாளருடையவை... ஏனைய கலட்டிக் காணிகள்.. இக்கிராமத்தில் பரந்தளவில் கலட்டுக் காணிகள் உள்ளன. இவர்கள் அவற்றை வாங்குவதற்கோ ஆக்கிரமிப்பதற்கோ சாதி வெறியர்கள் விடுகிறார்கள் இல்லை. அதுமட்டுமல்ல அடிமைக் குடிமைச் சாதியினர் தொடர்ந்தும் அடிமை குடிமைத் தொழில்களில் ஈடுபட வேண்டும் என்றும் வற்புறுத்தி வருகின்றனர்...''

"இப்பத்த பிரச்சினை எப்படி உருவானது?..."

"இக்கிராமத்தில் பல சனசமூக நிலையங்கள் உள்ளன. அடிமை குடிமை மக்கள் எனப்படுவோருக்கு ஐந்து சன சமூக நிலையங்கள் உள்ளன. அதில் ஒன்றில் இளைஞர்கள் கூடி ஒரு முடிவு எடுத்தார்கள்... அடிமை குடிமை வேலைகளை இனித் தொடர்ந்து செய்வதில்லை என்று முடிவு எடுத்தனர்... கிராம மக்களையும் கட்டுப்படுத்தினர்... ஒரு சிலர் இவர்களின் வேண்டுகோளை மதிக்காமல் அடிமை குடிமை வேலைகளுக்குச் சென்றனர்... அதனால் அவர்களின் நன்மை தீமைகளில் கிராம மக்கள் பங்கு கொள்ளாது அவர்களைத் தனிமைப்படுத்தினர்.. இதனால் தோட்டங்களில் கூலி வேலைக்கு ஆட்கள் கிடைக்க வில்லை. குடிமைத் தொழில்களுக்கும் ஆட்கள் கிடைக்க வில்லை.. இரு பகுதியினரும் பாதிக்கப்பட்டனர்... கூடுத லாகச் சாதிவெறியர்களின் பொருளாதாரம் பாதிப் படைந்தது... இதனால் சாதிவெறியர்கள் விட்டுக்கொடுத் தார்கள் செய்யும் வேலைக்குக் கூலி கொடுத்தார்கள்... அடிமை குடிமை முறைகளுக்கு அவர்கள் செல்ல வில்லை..."

"பிறகு......?"

"அந்த நிலையில் தான் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா வந்தது... தேர் இழுப்பின்போது இண்டைக்குக் காலை தான், ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த மக்கள் தேர் இழுப்பில் பங்கு கொள்ள முயன்றனர்... அவர்க ளும் தேர் வடத்தைப் பற்றினர்.. இதனை வேளாளர் எதிர்பார்க்கவில்லை... இதற்கு ஒடுக்கப்பட்ட மக்களைச் சேர்ந்த இராசையா தலைமை வகித்தான்.. உன்னைப் போல துடிப்புள்ள இளைஞன் அவன் பள்ளர் பகுதியைச் சேர்ந்தவன்... சாதிக்காரர்கள் தேர் இழுக்கவில்லை... வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியது... இரண்டு பகுதி யினரும் கைகலந்தார்கள்... திருவிழாவில் பொலிஸ் நின்றதால் பெரிய குழப்பம் நடவாது பிரச்சினை தடுக்கப் பட்டது... ஒடுக்கப்பட்ட மக்கள் திருவிழாவைப் பகிஸ்

கரித்தார்கள்... அதன் எதிரொலிதான் இன்று இரவு பள்ளர் பகுதியினரின் குடிசைகளுக்குத் தீ மூட்டலாக மாறியிருக்கிறது .. இது இந்தமட்டில் நின்றுவிடாது ..''

மதிவாணன் கூறியவாறு அன்றிரவு பல கவலைக்கிடமான சம்பவங்கள் இக்கிராமத்தில் நடந்தன. வேளாளர் பகுதியைச் சேர்ந்த இருவர் சந்தியில் வைத்து படுமோசமாகத் தாக்கப்பட்டார்கள். ஆபத்தான நிலையில் பெரிய ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து ஒடுக்கப்பட்ட மக்கள் சமூகத்தைச் சார்ந்த எழுவர் கத்தி வெட்டிற்குள்ளானுர்கள். அதனைத் தொடர்ந்து பொலீஸ் வந்தது. இராசையாவையும் இன்னும் சிலரையும் பிடித்துக் கொண்டு போனுர்கள். பலரைப் பிடித்து உதைத்து அடித்துச் சித்திரவதை செய்து விட்டுச் சென்றனர்.

'' சாதிவெறி நமது சமூகத்தில் ஒரு நோயாக மாறி விட்டது '' என்ருன் செல்வம்.

'' வர்க்க அடக்குமுறைக்கான ஒரு வடிவமாகவும் அது இருக்கிறது...'' என்ருன் மதிவாணன்.

மறுநாள் அக்கிராமத்தின் கிழக்குப் பகுதியில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. கிழக்குப் பக்க மக்கள் இப் போராட்டங்களில் கலந்து கொள்ளவில்லை.

உயர்சாதிப் பிரமுகர் ஒருவர் இறந்து போனுர். அடிமை முறை மூலம் குடிமைகளைக் கொண்டு மயானத்தில் அவரை எரிப்பதற்கான கட்டைகள் அடுக்கப் பட்டன. பரம்பரை பரம்பரையாக நிலவி வரும் இந்தத் தொழில் முறை, ஒடுக்கப்பட்ட மக்களின் வீறுகொண்ட இளைஞர்களுக்கு வெறுப்பைத் தந்தது. சாதிப் பகுப்பு அடிப்படையில் இது நிகழ்வது அடிமைத்தனமாக அவர் களுக்குப்பட்டது.

பிரமுகரின் ஊர்வலம் மயானத்தை அடைந்தபோது. அவரின் சிதைக்காக அடுக்கப்பட்டிருந்த கட்டைகள் எரிந்து கொண்டிருந்தன. பொலிசாரின் விசாரணை முடிந்து வந்த இராசையாவும் வேறு சில இளைஞர்களுமே நெருப்பு வைத்தார்கள் எனக் கண்டவர்கள் கூறினர், பிரச்சினை புது வடிவம் எடுத்தது.

''இப்படி அவர்கள் செய்திருக்கத் தேவையில்லை...'' என்றான் செல்வம்.

''நீங்கள் 1972-ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டப் பிரதியை ஏன் முற்றவெளியில் வைத்துத் தீக்கிரையாக்கினீர்கள்?...'' என்று மதிவாணன் கேட்டான்.

''அது தமிழருக்குரிய உரிமைகளை வழங்காமல் எங்களை இரண்டாந்தரப் பிரசைகள் ஆக்கியதால் எரித்தம். அதற்கும் இதற்கும் என்ன?—''

''எப்படி நீங்கள் அந்த அரசியலமைப்புச் சட்டத்தை அந்தப் பிரதியை அடிமைச் சின்னமாகக் கருதினீர்களோ அப்படித்தான், அடுக்கப்பட்ட அந்தக் கட்டைகளையும் இக்கிராமத்திலுள்ள ஒடுக்கப்பட்ட சமூக இளைஞர்கள் அடிமைச் சின்னமாகக் கருதினார்கள்... பெற்றோல் ஊத்திக் கொளுத்தினார்கள்... அந்தச் செயலுக்கு எவ்வளவு நியாயபூர்வம் இருக்கிறதோ அதேயளவு நியாயபூர்வம் இதற்கும் உண்டு...''

செல்வம் எதுவும் பேசவில்லை.

வானத்தை வெறித்துப் பார்த்தான்.

## 10

அன்றிரவும் அவனால் தூங்கமுடியவில்லை. இதயத்தைப் பாரமாக பல நிகழ்வுகள் அமுக்கின. இச் சமூகத்தில் களைய வேண்டிய கொடுமைகள் எவ்வளவோ இருக்கின்றன. அக்கிராமத்தில் கொழுந்து விட்டெரியும் சாதி வெறி...?

இப்படி எத்தனை எத்தனை கிராமங்களோ?

அரண்மனை வாழ்வைவிட்டு உண்மையைத் தேடி யாத்திரை செய்த புத்தனுக்கு ஞானம் பிறந்தது. சித்தார்த்தன் மட்டுமா ஞானம் பெறமுடியும்? ஒவ்வொரு மனிதனும் உண்மையைத் தேடி யாத்திரை தான் செய்கிறான். பொலிசாருக்குப் பயந்து அவன் ஊர் ஊராக தலை மறைந்து திரிவதும் ஒரு ஞான யாத்திரை தானே?

அதிகாலை வேளையில் அவன் தூங்கிப்போனான்.

மதிவாணன் தட்டி எழுப்பியதும் தான் கண் விழித்தான்.

நேரம் 8 மணி இருக்கும்,

''விசயம் படுமோசமாகிவிட்டது. செல்வம்...'' என்றான் மதிவாணன்: ''இராசையாவைக் கொன்றிட்டான்கள்...''

செல்வம் துடித்துப் பதைத்து எழுந்தான். அவனால் மதிவாணன் சொன்னதைக் கிரகிக்க முடியவில்லை.

''என்ன...? என்ன?...''

''இராசையாவைக் கொன்றிட்டான்கள்... அதுவும் படு பாதகமான படுகொலை... அதிகாலை இராசையா கள்ளுச் சீவப் பனை மரத்தில் ஏறியிருக்கிறான்... அதைப் பார்த்திருந்த உயர் சாதிக்காரன்கள் சிலர், அப்படியே பனையை அடியோடு தறித்து விழுத்தி இராசையாவைக் கொன்றிட்டான்கள்... பனை விழுந்து இராசையாவின் அலறல் எழுந்ததும் தான் விசயம் தெரிந்தது .. தறித்து விழுத்தியவன்கள் ஓடிவிட்டாங்கள்... செல்வம், இதை விடக் கொடுமை இருக்க முடியுமா? இதைவிடக் காட்டுமிராண்டித்தனம் இருக்க முடியுமா?... ஊரே கொதிப்படைந்து நிற்கிறது...''

''இராசையாவைப் போய்ப் பார்ப்பமா?...''

''அந்தப் பரிதாபத்தை நீ பார்க்கத்தான் வேண்டும் என்ருல் வா...''

''பார்க்கத்தான் வேண்டும்.. அந்தப் போராளிக்கு என் வணக்கத்தைத் தெரிவிக்கத்தான் வேண்டும்...''

அவர்கள் சென்று திரும்பி வந்தார்கள். ஒடுக்கப் பட்ட மக்களின் இதயக் கொதிப்பை அங்கு செல்வம் கண்டான். எரிமலைகள் கனலத் தொடங்கிவிட்டன.

பெருஞ்சுமையுடன் அவர்கள் அறைக்குத் திரும்பினர். மதிவாணனின் பெயரில் செல்வத்திற்கு ஒரு கடிதம் வந்திருந்தது, சின்னராசா தான் எழுதியிருந்தான்:

''...உடன் புறப்பட்டு இங்கு வா எதிர் பார்த்தபடி பிரச்சினைகள் இல்லை. பொலிசார் விரைவில் உன்னை மறந்து விடுவார்கள். இங்கு நீ புதுவாழ்வு தொடங்க லாம். நீ இங்கு வருவதாகவிருந்தால் நீ காவித்திரிகிருயே, துப்பாக்கி, அதனைத் தலையைச் சுற்றி எறிந்துவிட்டு வா. நாம் முதலில் நமது சமூகத்தின் புரையோடிப் போன புண்களுக்கு அறுவை மருத்துவம் செய்வோம். அதுதான் முதல் கடமை. அதன் பின்னர்...''

செல்வம் அக்கடிதத்துடன் நீண்ட நேரம் இருந்தான்.

பையைத் தூக்கிக் கொண்டான், பையிலிருந்த ரிவோல்வர் கனமாகக் கனத்தது.

இன்னும் எவ்வளவு நேரம் கனக்கப் போகிறது?

SENGAI ĀLIYAN (42) is a prolific writer. He has written 14 novels, which were published and 4 others printed shortly. He has also written more than 150 short stories. Being a Geographer he has written 40 text books on the subject.

Sengai Āliyan draws from his experience as a D R O in remote villages and write realistic fiction. One of his novels "Vadai Kattu" was made into a film locally and his another novel " Piralayam " won Sahitya Mandalaya Award. His novels depict the life - styles of fishing villages and jungle-surrounded hamlets in the North.

His best known novel is " Kattaru " which also won Sahitya Mandalaya award. In this novel Sengai Āliyan succeeds to a great extent in showing how bureacracy and the village hierarchy corrupt the innocent people in a village.

According to him, his purpose in writing is to being about a society where there are no classes,

K. S. Sivakumaran, ('*Island*'-17-1-82)